பக்கங்கள்: 12
விலை:20 ரூபா

இனி இது ரகசியம் அல்ல!

நல்லாட்சி அரசின் காலத்தில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் ஊழல்கள், முறைகேடுகள் குறித்து விசாரணை செய்வதற்கு ஆணைக் குழுவை நியமித்திருக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முதலில் தமது வெளிநாட்டு 'ரூர்'கள், அதனுடன் சேர்ந்து 'ஓசி' உல்லாச சுற்றுலா பக்கம் 02 »

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | தை 14 | திங்கட்கிழமை 28.01.2019 | கதிர் 84

# ரணில் போன்று சம்பந்தனும் பதவி மோகம் கொண்டவர்!

## எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த காட்டம்




கொழும்பு, ஜனவரி 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனின் கதையை நம்பி நாடாளுமன்றத்தின் சம்பிரதாயத்தையும், சபாநாயகரையும் அவமதித்துப் பேசும் சம்பந்தன், நாளைக்கு நீதி கோரி உயர்நீதிமன்றம் செல்லவும் கூடும். ரணில் விக்கிரமசிங்க போன்று பதவி ஆசை பிடித்த பட்டியலில் சம்பந்தனும் இணைந்துள்ளார். ரணிலின் பாணியில் சம்பந்தனும் எனது பதவிக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்தால் அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ பக்கம் 11 »

## தமிழர் தலைமைகளுக்கு ஐ.தே.க. மீதே நம்பிக்கை

### கூறுகிறார் கபீர் ஹாசீம்



கொழும்பு, ஜன. 28

ஐக்கிய தேசியக் கட்சியின் மீதான நம்பிக்கையில் தான் தமிழர் தலைமைகள் ஒருமித்த நாட்டுக்குள் தீர்வு கேட்கின்றனர் என அந்தக் கட்சியின் தவிசாளரும் அமைச்சருமான கபீர் ஹாசீம் தெரிவித்தார். பக்கம் 11 »

## கேப்பாபிலவு முகாம் வாசலில் தொடர்ந்து போராடும் மக்கள்!

முல்லைத்தீவு, ஜன. 28

முல்லைத்தீவு – கேப்பாபிலவில், இராணுவத்தினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி, படைமுகாம் வாயிலில் ஆரம்பிக்கப்பட்ட முற்றுகைப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது. காணி விடுவிப்பை பக்கம் 11 »



## பிரிக்கப்படமுடியாத – பிளவுபடாத நாட்டுக்குள் தமிழருக்கு அனைத்து உரிமைகளும் அவசியம்!

### வடக்கு ஆளுநர் சுரேன் ராகவன் வலியுறுத்தல்



கிளிநொச்சி, ஜன. 28

பிரிக்கமுடியாத நாட்டில் அனைத்து உரிமைகளையும் தமிழர்கள் அனுபவிக்கவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார். பக்கம் 11 »

## 'உத்தரதேவி' ரயில் சேவையை ஆரம்பித்து வைத்தார் மைத்திரி



கொழும்பு, ஜன. 28

கொழும்பு கோட்டை – காங்கேசன்துறை இடையிலான உத்தரதேவி ரயில் சேவை நேற்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகியுள்ளது.

உத்தரதேவி நேற்றுக் காலை 06.00 மணிக்குக் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டது. பக்கம் 11 »

## புதிய அரசமைப்பால் நாடு குழப்பமடையும்

### மல்கம் ரஞ்சித் ஆண்டகை எச்சரிக்கை

கொழும்பு,ஜன.28

ஒரு மாகாணத்துக்காக அரசமைப்பு உருவாக்கப்பட்டால் ஒட்டுமொத்த நாடும் குழப்பமடையும் என இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார். பக்கம் 11 »

## முன்னாள் தளபதிகளுக்கு பீல்ட் மார்ஷல் பதவிகள்?

### பொன்சேகாவுக்கு 'செக்'

கொழும்பு, ஜன. 28

முன்னாள் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் றொஷான் குணதிலகவும், கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவும், பீல்ட் மார்ஷலாகப் பதவி உயர்த்தப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பக்கம் 11 »

## உபரயில் நிலையம் நேற்று அறிவியல் நகரில் திறப்பு



கிளிநொச்சி, ஜன. 28

கிளிநொச்சி அறிவியல் நகரில் புதிதாக அமைக்கப்பட்ட உப ரயில் நிலையம் நேற்று மக்கள் பயன்பாட்டுக்காகக் கையளிக்கப்பட்டது. பக்கம் 11 »

## மகேந்திரனை நாடு கடத்துமாறு சிங்கப்பூரில் கோரினார் மைத்திரி

கொழும்பு, ஜன. 28

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்கு நாடு கடத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்கப்பூர் பிரதமரிடம் வலியுறுத்தினார் எனக் கொழும்பு சிங்கள ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

அண்மையில் சிங்கப்பூருக்கு பக்கம் 11 »

## ஜனாதிபதி வேட்பாளராக மைத்திரியை களமிறக்கவேண்டும் பொதுஜன பெரமுன

### துமிந்த திஸநாயக்க கோரிக்கை



கொழும்பு, ஜன. 28

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவித நிபந்தனையும் விதிக்காமல் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணைந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை வேட்பாளராக ஏற்றுக்கொள்ளவேண்டுமென பக்கம் 11 »

## கே.கே.எஸ். துறைமுக அபிவிருத்தித் திட்டம் இந்திய உதவியுடன் அடுத்த மாதம் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 28

இந்தியாவின் நிதியுதவியுடன் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தித் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தியாவின் 4.5 கோடி டொலர் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த திட்டம் மூன்று ஆண்டுகளில் நிறைவடையும்.

தற்போது இலங்கைக் கடற்படையின் வசமுள்ள காங்கேசன்துறை துறைமுகம், இந்தத்திட்டத்தின் மூலம், சரக்குகளைக் கையாளக் கூடிய துறைமுகமாக மாற்றப்படும்.

அடுத்த மாத தொடக்கத்தில், பிரதமர் ரணில் விக்ரமசிங்க, துறைமுகங்கள் கப்பல்துறை அமைச்சர் சாகல ரத்நாயக்க மற்றும் மூத்த அதிகாரிகள் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர்.

காங்கேசன்துறை பக்கம் 11 »

## விகாரையும், புத்தர் சிலையுமே கூட்டமைப்புக்கு கிடைத்த பரிசு!

### கேப்பாபிலவில் சிவசக்தி ஆனந்தன் விசனம்



வவுனியா, ஜன. 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த நான்கு வருடங்களாக அரசுக்கு வழங்கி வரும் நிபந்தனையற்ற ஆதரவுக்குக் கிடைத்த பரிசே நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நிறுவப்பட்டுள்ள புத்தர் சிலையும், செம்மலைப் பிரதேசத்தில் நிர்மாணம் செய்யப்பட்டுள்ள பௌத்த விகாரையும். இவ்வாறு காட்டமாகத் தெரிவித்தார் பக்கம் 11 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் | The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir


# பொங்கலன்று இருவர் மீது வாளால் வெட்டிய குற்றச்சாட்டில் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 28

தைப்பொங்கல் தினத்தன்று இருவர் மீது வாளால் வெட்டிக்காயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து இரண்டு வாள்கள் கைப்பற்றப்பட்டன என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் ஆவா குழுவைச் சேர்ந்த 19,23 மற்றும் 25 வயதுடையவர்கள் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் கட்டுடையைச் சேர்ந்த ஒருவரும் ஓட்டுமடம் பகுதியைச் சேர்ந்த இருவரும் என மூன்று இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

தைப்பொங்கல் தினமான கடந்த 15ஆம் திகதி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியில் இளைஞர்கள் இருவரை துரத்தி வந்து வாள் வெட்டுச் சம்பவம் இடம்பெற்றது. சம்பவத்தில் இளைஞர் ஒருவரின் கைவிரல் துண்டாடப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞர்கள் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் மூன்று இளைஞர்கள் யாழ்ப்பாணம் சிறப்புப் பொலிஸ் பிரிவினரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு வாள்களும் கைப்பற்றப்பட்டன. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

# சுழிபுரத்தில் கசிப்பு உற்பத்தியை நிறுத்த அதிகாரிகள் எவரும் ஒத்துழைப்பதில்லை

## சமூகமட்ட அமைப்புக்கள் கவலை

யாழ்ப்பாணம், ஜன. 28

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சுழிபுரம் – குடாக்கனை கிராமத்தில் கசிப்பு உற்பத்தி, விற்பனை நடைபெற்றுக்கொண்டிருக்கும்நிலையில் அதை நிறுத்துவது தொடர்பில் ஆராய்வதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு அப்பகுதி கிராம சேவையாளர்களும் வலி.மேற்கு பிரதேச செயலாளரும் வருகை தரவில்லை என பிரதேச மட்ட அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

இதனால் அந்தக் கூட்டத்திற்கு வருகைதந்தவட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் பொலிஸாரும் திரும்பிச் சென்றனர் எனவும் அதையடுத்து கூட்டம் நடத்தப்படாமலே நிறுத்தப்பட்டது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேற்படி பிரதேசத்தில் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக கசிப்பு உற்பத்தி, விற்பனை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனால் அப்பிரதேச மக்களும் அயற் பிரதேசமக்களும் பெரும்பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றன. மாணவர்களின் கல்வி நடவடிக்கையும் பாதிக்கப்பட்டு கிராமப்புறங்கள் கல்வியில் பெரும் பின்னடைவைக் கண்டுள்ளன.

இக்கசிப்பு உற்பத்தியை நிறுத்துமாறு பல தடவைகள் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துவருகின்ற போதிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. வட்டுக்கோட்டை பொலிஸாரும் இதில் போதிய அக்கறை எடுக்கவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில், கசிப்பு உற்பத்தியை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு குடாக்கனை மக்கள் இம் மாதம் 2 ஆம் திகதி வலி.மேற்கு பிரதேச செயலாளருக்கு கடிதம் ஒன்றைக் கையளித்தனர். கசிப்பு உற்பத்தியில் ஈடுபடும் 7 குடும்பங்களின் பெயர் விபரங்களும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன. இதனால் பாதிக்கப்படுகின்ற கிராமங்களின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ்ப்பாணம் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர், வட்டுக்கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி, யாழ்.அரச அதிபர், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர், சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி, மதுவரித் திணைக்கள் பொறுப்பதிகாரி, ஜே/172,173 கிராம சேவையாளர்கள் போன்றோருக்கும் அனுப்பப்பட்டிருந்தன.

இதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில், சுழிபுரம் மத்திய கிராம அபிவிருத்திச் சங்கமும் குடாக்கனை சமூக மட்ட அமைப்புக்களும் இணைந்து கடந்த 17 ஆம் திகதி கூட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தன.

இற்கு வலி.மேற்கு பிரதேச செயலாளரும் மேற்படி கிராம சேவையாளர்களும் வருகை தருவார்கள் எனக் கூறிய போதிலும் அன்று அவர்கள் வருகை தரவில்லை. இதனால் அவர்கள் இல்லாத நிலையில் கூட்டத்தை நடத்த முடியாது எனக் கூறிவிட்டு அங்குவருகைதந்திருந்தபொலிஸ் பொறுப்பதிகாரிதிரும்பிச்சென்றார் எனத் தெரியவருகின்றது.

கசிப்பு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எவரும் ஒத்துழைப்பு வழங்காமை குறித்து மேற்படி பிரதேச மக்கள் ஏமாற்றமும் விரத்தியும் அடைந்துள்ளனர். இது தொடர்பாக அடுத்த கட்ட நடவடிக்கைதொடர்பாக ஆராய்ந்து வருகின்றார்கள் என குடாக்கனை சமூக மட்ட அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வோர்போன்றவகைகளினால் ஏற்படும் செலவுகளை விசாரிப்பதற்கு ஓர் ஆணைக்குழுவை நியமித்தால் நல்லது என்கிறார் ஐ.தே.கட்சியின் மூத்த பிரமுகர் ஒருவர்.

நாட்டுத்தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி மைத்திரிபால பல நாடுகளுக்கும் விஜயம் செய்வதும் பல நாட்டுத் தலைவர்களையும் இங்கு வரவேற்பதும் சுவதேச இராஜீக விவகாரம். அது தவறே அல்ல.

ஆனால் கைவசம் வைத்திருக்கும் அமைச்சுக்கள் தொடர்பில் அமைச்சர்கள் மட்டத்தில் வெளிநாடுகளில் நடக்கும் கூட்டங்கள், கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள் போன்றவற்றுக்குக் கூட ஒன்றுவிடாமல் பயணம் செய்கின்றார் 'அமைச்சர்' மைத்திரிபால சிறிசேன என்கிறார் அந்தப் பிரமுகர்.

கடந்த வாரம் பிலிப்பீன்ஸின் மணிலாவுக்குப் பயணம் மேற்கொண்டார்மைத்திரிபாலசிறிசேன – போதைவஸ்துக்கு எதிராக அந்த நாடு மேற்கொள்ளும் தீவிர நடவடிக்கைகள்பற்றிய ஆய்வுக்காக.

இந்தப் பயணம் பற்றிய தகவல் ஏதும் அதிகம் வெளியாகவில்லை. ஏனென்றால் ஜனாதிபதியுடன் இப்பயணத்தில் ஊடகவியலாளர்கள் எவரும் செல்லவே இல்லை – எதிரணியைச் சேர்ந்த ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒரு குழு எம்.பிக்களைத்தவிர.அரசில்இடம்பெற்றிராத அந்த எம்.பிக்களுக்கு அது நல்ல 'ஓஸி டிரிப்'!

மணிலா பயணம் முடிந்து 4 நாள்களில் மற்றொரு குழு எம்.பிக்களுடன் சிங்கப்பூர் பயணமானார் ஜனாதிபதி – இம்முறை சூழலியல் மாநாடு ஒன்றில் பங்குபற்றுவதற்கு.

அந்த மாநாட்டில் 40 நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்றினர். எல்லோரும் பெரும்பாலும் அதிகாரிகள், சூழல் அமைப்புக்களின் பிரதிநிதிகள், ஓரிருவர் சூழலியல் அமைச்சர் அல்லது பிரதி அமைச்சர்கள். ஒரேயொரு நாட்டுத் தலைவர்மட்டுமே அதில் பங்குபற்றினார். அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

கடந்த ஜுலை மாதம் கூட இத்தாலியின் ரோம் நகரில் நடந்த அதிகாரிகளுக்கான ஆறாவது வனவள மாநாட்டில் போய் அமர்ந்து கொண்டார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. மகாவலி அபிவிருத்தி சூழலியல் அமைச்சர் என்ற ரீதியில் அதில் அவர் பங்குபற்றினார் என்று கூறப்பட்டது.

நாட்டின் தலைவராக இருந்து கொண்டு, கீழ்மட்ட மாநாடுகள், கருத்தரங்குகள் போன்ற எவற்றையும் கூடத் தவறவிடாமல் ஓடி, ஓடிக் கலந்து கொள்ளும் மைத்திரிபால சிறிசேனவின் வெளிநாட்டுப் பயண மோகம் குறித்துத்தான் கொழும்பு அரசியலில் இப்போது அதிகம் பரிகாசமாகப் பேசப்படுகின்றதாம்!

-மின்னல்-

# கிளிநொச்சியில் கூட்டணி அலுவலகம் மீது தாக்குதல்

கிளிநொச்சி, ஜன. 28

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் அலுவலகம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

அந்த அலுவலகத்தில் இரவு யாரும் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் சிலர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால் அலுவலகத்தில் முன் கதவு கண்ணாடிகள் உடைக்கப்பட்டுள்ளதுடன், அலுவலகத்தின் சில பகுதிகள் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# என் மீதான குற்றச்சாட்டுக்களை ஆதாரத்துடன் வெளிப்படுத்துக!

## கோப் குழுவிடம் கோருகிறார் குமார

தான் போக்குவரத்து அமைச்சராக இருந்தபோது இடம்பெற்றதாக கோப் குழுவினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்களை அவர்கள் ஆதாரத்துடன் வெளிப்படுத்தவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம குறிப்பிட்டுள்ளார்.

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் இலங்கைப் போக்குவரத்து சபைக்கு பஸ்கள் இறக்குமதி செய்யப்பட்டமை தொடர்பாக கோப் குழுவினரின் அறிக்கை குறித்து ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கோப் குழுவினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கான சுயாதீனமான விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைக்க நான் தயார். ஆனால் அவர்கள் என்மீதான அனைத்துக் குற்றச்சாட்டுக்களுக்கும் ஆதாரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும்.

போக்குவரத்து அமைச்சர் பொறுப்பில் நான் இருந்தபோது இலங்கை போக்குவரத்து சபைக்கு ஒரு தொகுதி பஸ்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இதன்பொழுது எவ்விதமான நிதியுதவியும் எமக்கு வழங்கப்படவில்லை. மாதந்தக் கொடுப்பனவுகளின் ஊடாகவே பஸ்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

அத்துடன் அமைச்சரவையின் அங்கீகாரத்துடனேயே அந்தக் கொள்வனவு நடவடிக்கைகள் இடம்பெற்றன – என்றார். (ஐ)

# மஹிந்த வீட்டுத் திருமணத்துக்கு தாமதமாக வந்தமை எதற்காக? மனம் திறந்தார் பஸில்



கொழும்பு, ஜன. 28

மஹிந்த ராஜபக்ஷவின் கடைக்குட்டி மகனின் திருமண நிகழ்வில் பஸில் ராஜபக்ஷ கலந்துகொள்ளவில்லை என்றும், ராஜபக்ஷ குடும்பத்துக்குள் மோதல் ஏற்பட்டுள்ளது என்றும் சமூக வலைத்தளங்களில் பலகோணங்களில் தகவல்கள் வெளியாகின.

மஹிந்தவின் இளைய புதல்வர் ரோஹிதவின் திருமணம் கடந்த வியாழக்கிழமை மிகவும் எளிமையான முறையில் நடைபெற்றது. அரசியல் பிரமுகர்களும் பங்கேற்றிருந்தனர்.

எனினும், காலைவேளை பஸில் ராஜபக்ஷ பங்கேற்றிருக்கவில்லை. சமூகவலைத்தளங்களில் வெளியான படங்களிலும் அவரின் புகைப்படம் இருக்கில்லை.

இதனால், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ராஜபக்ஷக்களுக்கிடையே மோதல் ஏற்பட்டுள்ளது. அதன் வெளிப்பாடாகத்தான் பஸில் நிகழ்வை புறக்கணித்தார் என்றும் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலைதான் பஸிலின் புகைப்படம் வெளியானது. எனவே, ஏன் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்கவில்லையென அவருக்கு நெருக்கமான சிரேஸ்டதமிழ் ஊடகவியலாளரொருவர் வினவியுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள பஸில்,

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் களுத்துறை மாவட்ட எம்.பி., ரோஹித்த அபேகுணவர்தனவின் புதல்வி நிதினியின் திருமண நிகழ்வும் அன்றைய தினத்தில்தான் கொழும்பில் நடைபெற்றது.

அதில் பெண் வீட்டார் சார்பில் சாட்சியாக கையெழுத்திட வேண்டியிருந்தமையால் தங்காலைக்கு உரிய நேரத்தில் செல்ல முடியாமல் தாதமித்தே சென்றேன் என்றார். (ஐ)

## பணச்சலவை, நிதி மோசடி, குடிவரவு சட்டமீறல்

# மஹிந்தவின் மைத்துனர் ஜாலிய விக்ரமசூரியவுக்கு அமெரிக்காவில் சிறைத் தண்டனை விதிக்க வாய்ப்பு

கொழும்பு,ஜன.28

அமெரிக்க நீதிமன்றத்தில் ஐந்து குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள, மஹிந்த ராஜபக்ஷவின் மைத்துனர் ஜாலிய விக்ரமசூரிய மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு அனைத்து சொத்துகளும் பறிமுதல் செய்யப்படும் வாய்ப்பு இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தார், ஜாலிய விக்ரமசூரிய.

அமெரிக்க குடியுரிமையையும் கொண்டுள்ள இவர் அங்கு பதவியில் இருந்த காலத்தில் பணச்சலவை, நிதி மோசடி, மற்றும் குடிவரவுச் சட்டங்களை மீறியமை குறித்து அமெரிக்காவின் கொலம்பியா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பணச்சலவை சட்டத்தின் கீழ் இரண்டு குற்றச்சாட்டுகளும், நிதிமோசடி தொடர்பான இரண்டு குற்றச்சாட்டுகளும், கடந்த 2018 மேமாதம் அமெரிக்கா வந்த போது குடிவரவுத் திணைக்களத்துக்கு தவறான தகவல் வழங்கினார் என ஒரு குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் மத்திய புலனாய்வு அமைப்பான எவ்பிஐ அதிகாரிகளின் நீண்ட புலனாய்வுக்குப் பின்னர் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஒக்ரோபர் 26ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக நியமிக்கப்பட்ட பின்னர் இந்த வழக்கு விரைவுபடுத்தப்பட்டது. ஆட்சிக்கவிழ்ப்பை அடுத்து, அவருக்கு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் புதிய இராஜதந்திரப் பதவிகளைக் கொடுத்தால், இந்த வழக்கில் சிக்கல் ஏற்படும் என கருதப்பட்டதால், விரைவாக வழக்கை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும், ஆட்சிக்கவிழ்ப்பு தோல்வியில் முடிந்த நிலையில் ஜாலிய விக்ரமசூரியவுக்கு எதிரான வழக்கு எந்தச் சிக்கலுமின்றி, அமெரிக்க அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் நாளை செவ்வாய்க்கிழமை அமெரிக்க நீதிமன்றத்தில் சரணடைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



கொலம்பியா மாவட்ட நீதிபதி தலைமையில் அன்று காலை 10.45 மணிக்கு இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, ஜாலிய விக்ரமசூரியவுக்கு, அவர் மீதான குற்றச்சாட்டுகள் வாசித்துக் காண்பிக்கப்படும்.

இலங்கையின் தூதுவராகப் பணியாற்றிய ஒருவர் வெளிநாடு ஒன்றின் நீதிமன்றத்தில் இதுபோன்ற குற்றச்சாட்டை எதிர்கொள்வது இதுவே முதல்முறையாகும்.

இந்த வழக்கில் ஜாலிய விக்ரமசூரிய குறைந்த தண்டனையைப் பெற்றுக் கொள்வதற்காக, தம்முடன் ஒத்துழைப்பார் என்று அமெரிக்க அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

இவர் மீதான பணச்சலவைக் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், 20 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும். அத்துடன் அவர் தனது அனைத்துச் சொத்துக்களையும் இழக்க நேரிடும்.

ஜாலிய விக்ரமசூரிய இலங்கையிலும், நிதிமோசடி, வருமானத்தை மீறி சொத்துச் சேர்த்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டிருப்பவர் என்பது குறிப் பிடத்தக்கது. (ஏ)

# மத்தல விமான நிலையத்தின் 70 வீத பங்குகள் இந்தியாவுக்கு

கொழும்பு,ஜன.28

மத்தல விமான நிலையத்தின் 70 வீதமான பங்குகளை அரசாங்கம் இந்தியாவுக்கு வழங்கவுள்ளது. சீனாவுக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பங்குகள் வழங்கப்பட்டமை போல, மத்தல விமான நிலையத்தின் 70 வீதமான பங்கு இந்தியாவுக்கு வழங்கப்படவுள்ளது.




இதற்கு அனுமதி அளிக்கும் அமைச்சரவைப் பத்திரம் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மத்தல விமான நிலையத்தை கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்யும் உடன்பாட்டில் இலங்கை விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனமும், இந்தியாவின் விமான நிலைய அதிகாரசபையும் கையெழுத்திடவுள்ளன.

இரண்டு தரப்புகளும் கலந்துரையாடிய பின்னர் அமைச்சரவைப் பத்திரத்தில் திருத்தங்கள் செய்யப்படும்.

மத்தல விமான நிலையம் ஆதாயத்தைத் தரும் திட்டமாக இல்லாததால், அதன் 70 வீதத்துக்கும் குறைவான பங்குகளை ஏற்க இந்தியா மறுத்து வருகிறது,

விமான நிலையங்களின் மூலம் ஓர் இரவில் இலாபமீட்ட முடியாது என்றும் அதற்கு 15 ஆண்டுகள் வரை தேவைப்படும் என்றும் சொல்லப்படுகிறது.

முதலில் மத்தல விமான நிலையத்தை 99 ஆண்டுகள் குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளவே இந்தியா விரும்பியது, எனினும், நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து, 40 ஆண்டு குத்தகை உடன்பாடாக கையெழுத்திட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

எனினும், இரண்டு தரப்பும் இந்தக் கூட்டு முயற்சி உடன்பாட்டை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மீளாய்வு செய்ய முடியும்.

அத்துடன் பங்கு விகிதம் தொடர்பாகவும் இருதரப்பு இணக்கப்பாட்டுடன் மாற்றங்களைச் செய்யவும் முடியும் என்றும் கூறப்படுகிறது. (ஏ)

## கட்டுநாயக்காவுக்கு விமானம் மூலம் வரும்

# அமெரிக்க யுத்த தளபாடங்களை சோதனையிட அனுமதி இல்லை

கொழும்பு,ஜன.28

அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களம் கட்டுநாயக்க சர்வதேசவிமானநிலையத்தைப் பயன்படுத்தி இந்து சமுத்திரத்திலுள்ள அமெரிக்க யுத்தக் கப்பல்களுக்கு யுத்தஉபகரணங்களைவிநியோகிக்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாகதெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கைக்காக யுத்த தளபாடங்களைஏற்றிவந்த அமெரிக்க விமானப்படை விமானம் ஒன்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடந்த 25 ஆம் திகதி தரையிறங்கியுள்ளது.

இவ்வாறு அமெரிக்க விமானத்தில் வரும் யுத்த தளபாடங்களை சோதனையிடுவதற்கு இலங்கைசுங்கத்துக்கோ, இராணுவத்துக்கோ, பொலிஸுக்கோ அனுமதி வழங்கப்படவில்லை யென தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்குக் கொண்டு வரப்படும் உபகரணங்கள் இந்து சமுத்திரத்தில்காணப்படும் ஜோன்ஸ்டென்னிஸ் எனும் பெயரிலான அணுசக்தியில் செயற்படும் பாரிய விமானங்கள்கொண்டு செல்லும் கப்பலுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

கடந்த வருடம் ஒகஸ்ட் 28 ஆம் திகதி கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்துக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையின் பின்னர் ஏற்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் அமெரிக்க விமானங்களுக்குசர்வதேசவிமானநிலையமான கட்டுநாயக்கவுக்கு வர அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த அமெரிக்க இராணுவ நடவடிக்கை எதிர்வரும் ஜனவரி 28 ஆம் திகதி வரையில் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த தகவல்களை கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவர் வெளிப்படுத்தியுள்ளபோதிலும், அரசாங்கம் எந்தவொருதகவலையும்வெளிப்படுத்தவில்லையென வும் நேற்றைய சிங்கள வார இதழொன்று தெரிவித்துள்ளது. (ஏ)

## லண்டனில் பிரியங்க பெர்னாண்டோ மீதான

# நடவடிக்கையை திரும்ப பெறக்கோரி இலங்கை ராணுவம் முறையீடு

கொழும்பு,ஜன.28

லண்டனில் உள்ள இலங்கை தூதரக பாதுகாப்பு ஆலோசகரா முன்னர் பணியாற்றிய பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ மீதான நடவடிக்கையை திரும்பப் பெறக் கோரி, மான்செஸ்டர் மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் இலங்கை இராணுவம் முறைப்படியான முறையீடு ஒன்றைச் செய்யவுள்ளது.

லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தின் ஊடாக இந்த முறையீடு செய்யப்படும் என இலங்கை இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார்.

பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோ ஒரு கொண்டாடப்படும் போர் வீரர் என்றும், அவருக்கு எதிரான குற்றச்சாட்டுகளை கைவிடுமாறும், இலங்கை இராணுவம் முறையீடு செய்யும் என அவர் மேலும் கூறியுள்ளார்.

வரும் பெப்ரவரி 1ஆம் நாள் பிரிகேடியர் பெர்னாண்டோவுக்கு எதிரான வழக்கு லண்டன் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், அன்றைய நாள் அவருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டிருந்த பிடியாணை மீளப் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

அதேவேளை, இந்த விவகாரம் இராஜதந்திரம் தொடர்பான மோசமான முன்னுதாரணத்தை ஏற்படுத்தும் என்று



கொழும்பில் உள்ள பிரித்தானியத்தூதுவர் ஜேம்ஸ் டௌரிஸிடம், இலங்கை அதிகாரிகள் தகவல்களை பரிமாறியுள்ளதாக, வெளிவிவகாரச் செயலர் ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

முறையாக நியமிக்கப்பட்ட இராஜதந்திரி என்ற வகையில், பிரிகேடியர் பிரியங்க பெர்னாண்டோவின் இராஜதந்திர விலக்குரிமையை உறுதிப்படுத்துமாறு தாம் பிரித்தானிய அரசாங்கத்திடம் கோரியிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பிரித்தானியத் தூதுவர் ஜேம்ஸ் டௌரிஸ் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு இந்த நீதிமன்ற நடவடிக்கை தொடர்பாக இலங்கைஅரசாங்கத்தின் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(ஏ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## கூட்டமைப்பின் ஐக்கியம் முக்கியம்

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் – குறிப்பாக அதன் தலைவர் இரா.சம்பந்தன் போன்றோர் – தேர்தல்கள் நெருங்கும் சமயத்தில் ஒரு விடயத்தை அதிகம் வலியுறுத்துவர்.**

**அது – ‘ஒற்றுமை அவசியம்’ அல்லது ‘ஐக்கியம் முக்கியம்’ என்பதுதான்.**

**கூட்டமைப்பின் தேர்தல் சுலோகங்களில் பிரதானமானது இதுதான். இந்த ஒன்றுக்காகத்தான் தேர்தல்களில் கூட்டமைப்புக்குத் தமிழர்கள் பெரும்பாலும் வாக்களித்தனர்; வாக்களிக்கின்றனர். கூட்டமைப்பின் தேர்தல் வெற்றிகளின் சூத்திரம் பெரும்பாலும் இந்த ‘ஐக்கிய முக்கியம்’ என்பதில்தான் அடங்கியுள்ளது என்பது வெள்ளிடைமலை.**

**இப்போதுள்ள பிறந்துள்ள 2019 ஆம் வருடத்தை தேர்தல் ஆண்டு என்றே அரசியல் நோக்கர்களும் விமர்சகர்களும் அடித்துக் கூறுகின்றனர்.**

**இந்தப் பின்புலத்தில் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் மத்தியில் இதே ‘ஐக்கியம் முக்கியம்’ என்ற விடயத்தைத் திரும்பவும் வலியுறுத்தியிருக்கின்றார் அக்கட்சியின் சிரேஷ்ட தலைவரான இரா.சம்பந்தன்.**

**அதனைத் தேர்தலை இலக்கு வைத்ததாக – வாக்குகளைச் சுருட்டும் எத்தனமாக – பார்க்கத் தேவையில்லை என்பதே எமது கருத்தாகும்.**

***“அரசாங்கத்தின் செயற்பாடுகளால் தமிழர்கள் மீதான சர்வதேசத்தின் பார்வை என்றும் இல்லாதவாறு இலங்கை மீது வலுவாகக் காணப்படுகின்றது. அத்தகைய நிலையில் எம்மிடையே ஒற்றுமை அவசியம்; மிகவும் அவசியம். வடக்கு, கிழக்கு மக்கள் அதனை வெளிப்படுத்துவார்கள் என நம்புகிறோம்.”*** **– என்று அங்கு கூறியிருக்கின்றார் சம்பந்தன்.**

**அவரின் இந்தக் கூற்று தேர்தலை இலக்கு வைத்ததாகவே இருக்கலாம். *“வடக்கு, கிழக்கு மக்கள் அந்த ஒற்றுமையை வெளிப்படுத்துவார்கள் என்று நம்புகிறேன்.”* – என்று சம்பந்தன் மக்களைத் தொடர்புபடுத்தி அதனைக் கூறுகின்றமையால் அது வாக்குகளை இலக்கு வைத்த கூற்றாகவே இருக்கலாம்.**

**ஆனாலும் இந்தச் சமயத்தில் – சம்பந்தன் குறிப்பிடுமாற் போல சர்வதேசத்தின் பார்வை இலங்கை மீது திரும்பியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் – ஒற்றுமை குறைந்த பட்சம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளாவது கட்டிக்காக்கப்பட்டு பேணப்பட வேண்டும் என்பதையே சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.**

**2015 ஜனவரியில் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பீடத்தின் வீழ்ச்சியோடு, இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகள் புத்துயிர்ப்புப் பெற்றன. 2015 ஒகஸ்ட் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் நல்லாட்சி அரசு அமைந்ததும் அந்த முயற்சிகள் முனைப்புப் பெற வாய்ப்புகள் கிட்டின.**

**இந்த எத்தனங்களுக்கு சர்வதேசத்தின் முழு ஆதரவும், ஒத்துழைப்பும், ஆசீர்வாதமும் கிட்டின. இந்த முயற்சிகளை சர்வதேசம் நுணுக்குக் கண்ணாடிப் பார்வை மூலம் நோட்டமிட்டுக் கொண்டிருந்தது; நோட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது.**

**அந்த முயற்சிகளில் பிரதான தரப்புகளுள் ஒன்றான தமிழர் பக்கத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பிரதிநிதித்துவப் படுத்தியது; பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.**

**தமிழர் பக்கத்தில் ஏனைய பல கட்சிகள், தரப்புகள் வெளியில் நின்று விமர்சித்தன. எதிர்த்தன. அந்த வேலையைத் தொடரு கின்றன.**

**இந்நிலையில்தான் தென்னிலங்கை அரசுத் தலைமை – ஆட்சிப் பீடம் – பௌத்த, சிங்களப் பேரினவாதிகளின் இனவாதக் கூக்குரலுக்கு அஞ்சி இந்தச் சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதிலிருந்து ஜாகா வாங்கத் தொடங்கியிருக்கின்றது; பின்வாங்கி, சமாதான முயற்சிகளைக் கிடப்பில் போடும் வேலையை ஆரம்பித்திருக்கின்றது.**

**ஆகையால், இதுவரை இந்த முயற்சிகளில் முழு நம்பிக்கையோடும் நேர்மைத் திறத்தோடும் பங்குபற்றி வந்த கூட்டமைப்பு, இந்த முயற்சிகளைக் குழப்பிப் பாழ்படுத்திச் சிதைத்தவர்கள் தமிழர்கள் அல்லர், தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதமும் அதற்கு அஞ்சி நிற்கும் கொழும்பு ஆட்சிப் பீடமும் தான் என்று காட்ட வேண்டிய முக்கிய கட்டத்தில் உள்ளது.**

**அதனால்தான் –**

**இந்தக் கட்டத்தில் ’ஐக்கியம் முக்கியம்’ என்ற சம்பந்தரின் கோரிக்கையை வழமையாகத் தேர்தல்களில் வாக்குகளைச் சுருட்டப் பயன்படுத்தும் கோமாகப் பார்க்காமல் அதனையும் கடந்து பார்க்க வேண்டும் என்று நாம் கூறுகின்றோம்.**

**அதனால்தான் –**

**இந்தக் கட்டத்தில் மேற்படி சமாதான முயற்சிகளின் பெறுபேறாக வெளிப்பட்ட புதிய அரசமைப்பு நகலுக்கான நிபுணர் குழுவின் அறிக்கையை நிராகரிப்பதாக ரெலோ அறிவித்தமையை, கூட்டமைப்பின் கூட்டுப் பொறுப்பிலிருந்து பொறுத்த கட்டத்தில் நழுவும் ‘அரசியல் சந்தர்ப்பவாதம்’ என்று இப்பத்தியில் விமர்சித்தோம்.**

**சரியோ, பிழையோ தென்னிலங்கை அரசுத் தரப்புடன் சேர்ந்து ஓர் அமைதித் தீர்வை – இணக்கத்தை – எட்டுவதற்கு தமிழர்கள் இதய சுத்தியுடன் முயன்றார்கள், வழமைபோல பௌத்த, சிங்கள பேரினவாதப் போக்குடைய தெற்கு ஆட்சிப் பீடமே அதை இடைவழியில் முறித்து, தமிழர்களை ஏமாற்றியது என்பதையும் தமிழர் தரப்பு அல்ல என்பதையும் ஒன்றுபட்டு நிற்பதன் மூலம் மீண்டும் சர்வதேசத்துக்கு காட்டும் ஒரு சந்தர்ப்பம் எமக்குக் கிட்டியிருக்கின்றது.**

**அது மட்டுமல்ல, இந்தச் சந்தர்ப்பத்தில்தான் ஐ.நாவின் மனித உரிமைகளுக்கான கவுன்ஸிலின் ஜெனீவா கூட்டத் தொடரிலும் இலங்கை விவகாரம் மீளாய்வுக்கு எடுக்கப்படவிருக்கின்றது.**

**ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தானும் அனுசரணைப் பணி வகித்து கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்களை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, மேலும் இரண்டு ஆண்டுகள் மேலதிகமாக கால அவகாசம் வழங்கிய பின்னரும், நிறைவேற்றவேயில்லை என்ற பழி இலங்கை மீது விழும் சூழலில் –**

**இந்த விவகாரங்களைக் கையாள்வதில் தமிழ்க் கூட்டமைப்பு குறைந்த பட்சம் தனக்குள்ளாவது ஐக்கியமாக இருப்பது முக்கியம்தான்.**

**அதனால்தான் இந்தக் கட்டத்தில் கூட்டமைப்பை உடைக்கும் எண்ணம் தமக்கு இல்லை என்ற நீதியரசர் விக்னேஸ்வரனின் கூற்றையும் நாம் சிலாகித்து வரவேற்கின்றோம்.**

### வாயால் வந்தது வினை

# பாதுகாப்புச் செயலர் பதவியிலிருந்து நீக்கப்படும் ஹேமசிறி பெர்னாண்டோ



கொழும்பு,ஜன.28

பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோவை பதவி நீக்க வேண்டும் என்று ஜனாதிபதிக்கு அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தில் உள்ள அனைவரும் போர் வீரர்கள் அல்ல என்றும், இராணுவத்தில் உள்ள ஒருவர் குற்றம் செய்தால் அவர் குற்றவாளிதான் என்றும் நாலந்தா கல்லூரியில் நடந்த நிகழ்வு ஒன்றில் கூறியிருந்தார் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ.

அத்துடன், விருதுகளைப் பெற்றவர்கள் தான் போர் வீரர்கள் என்றும் குறிப்பிட்ட அவர், அடுத்த இரண்டு வாரங்களில் 11 படை வீரர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு நீதிமன்றத்தில் சுமத்தப்படும் என்றும் அதற்குப் பின்னர் புலம்பெயர் தமிழர்களால் வாய் திறக்க முடியாது எனவும் தெரிவித்திருந்தார்.

அவரது இந்தக் கருத்துக்கு முன்னாள் படை அதிகாரிகள், கடும்போக்கு சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இதுதொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ பேசியுள்ளார்.

இதுகுறித்து அவர் தகவல் வெளியிடுகையில், ‘ஆயுதப்படையினரை விமர்சிக்கும் வகையில் பாதுகாப்புச் செயலர் உரையாற்றியதாக தகவல் கிடைத்ததும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினேன்.

இது ஜனாதிபதியின் கருத்தை பிரதிபலிப்பதாக தோன்றுகிறது என நான் அவரிடம் கூறினேன்.

அதற்கு அவர், பாதுகாப்புச் செயலர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு. அவரது சொந்த இடத்தில் இருக்கிறார் என்றும், இந்த செய்தி சரியானதாக இருக்காது என்றும் கூறினார்.

அடுத்தநாள், ஜனாதிபதி என்னை தொலைபேசியில் அழைத்தார். பாதுகாப்புச் செயலர் அப்படிக் கூறியிருக்கிறார் என்பது உண்மை தான் என்று தெரிவித்தார். தானும் தொலைபேசி செய்திகளில் அதனைப் பார்த்ததாகவும் கூறினார்.

பாதுகாப்புச் செயலரை அழைத்து, இது குறித்து அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது என்று கூறுமாறு ஜனாதிபதியிடம் நான் கூறினேன்.

போர்வீரர்கள் மீது குற்றச்சாட்டு இருந்தால் அவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யுமாறு புலம்பெயர்ந்தோருக்கு அழைப்பு விட பாதுகாப்புச் செயலருக்கு அதிகாரம் இல்லை.

அத்தகையவர்கள் எமக்குத் தேவையில்லை. அவரது கருத்தை வன்மையாக கண்டிக்கிறோம். பாதுகாப்புச் செயலர் பதவிக்கு அவர் பொருத்தமானவர் அல்லர் என்றும் தெரிவித்தார்.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில உள்ளிட்டவர்களும், முன்னாள் படை அதிகாரிகளும் ஹேமசிறி பெர்னாண்டோவின் கருத்துக்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளதுடன், அவரை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளனர்.

## உடுவில் மான்ஸ் த.க.பா. விளையாட்டு விழா

மானிப்பாய், ஜன. 28

உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை ‘செயற்பட்டு மகிழ்வோம்’ – வருடாந்த விளையாட்டு விழா – நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு, அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவர் (லண்டன்) அ.ஜெயரட்ணம் கலந்து கொள்வார். திருமதி கெங்காதேவி ஜெயரட்ணம் பரிசில்களை வழங்குவார். (இ

# படைப்புழுவை ஒழித்துக் கட்ட பிரிட்டனிலிருந்து உபகரணங்கள்

கொழும்பு,ஜன.28

படைப்புழுவை ஒழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்களை, பிரித்தானியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனை பரிசோதனைக்கு உட்படுத்தியதில், வெற்றியளித்துள்ளதாகவும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.எம்.டபிள்யூ. வீரகோன் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், தற்போது படைப்புழு பரவும் வேகம் குறைவடைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இதேவேளை, மறு அறிவித்தல் வரை சிறுபோகத்தின்போது சோளப் பயிர்ச்செய்கையை கைவிடுமாறும் விவசாயிகளிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சோளப் பயிர்ச்செய்கையில் வேகமாகப் பரவி வரும் படைப்புழுத் தாக்கத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்குடனேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டதாக விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பெரும்பாலான பகுதிகளிலுள்ள சோளப் பயிர்ச்செய்கைகள், படைப்புழுவின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சோளப்பயிர் தவிர்த்த, பிற பயிர்களிலும் இந்தப் புழுவின் தாக்கம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாலியில் கண்ணிவெடிக்கு இலக்கான இலங்கை ராணுவ சிப்பாய் கவலைக்கிடம்

மாலியில் ஐ.நா அமைதிப் படையில் இடம்பெற்றுள்ள இலங்கை படையினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஒருவரின் நிலை மோசமாக இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை காலை ஐ.நா வாகனத் தொடரணிக்கு பாதுகாப்பு அளித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த போது, இலங்கை இராணுவ அணியின் துருப்புக்காவி கவச வாகனம் ஒன்றின் மீது போன்ட்சா என்ற இடத்தில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் கப்டன் உள்ளிட்ட இரண்டு இலங்கை படையினர் கொல்லப்பட்டனர். மேலும், 6 படையினர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள், ஐ.நா அமைதிப்படையில் உள்ள கனடிய விமானப்படையின் மீட்பு உலங்குவானூர்தி மூலம், 400 கி.மீ தொலைவில் உள்ள சீன மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவரின் நிலை மோசமாக இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலை நடத்தியவர்கள் இன்னமும் உரிமை கோரவில்லை. அதேவேளை கொல்லப்பட்ட இரண்டு இலங்கைப் படையினரதும் சடலங்கள் வரும் புதன்கிழமை கொழும்புக்குக் கொண்டு வரப்படவுள்ளன என இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஏ)

## நாளை

29.01.2019
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: விசாகம் மு.இ. 8.25 வரை
திதி : நவமி மு.இ. 8.11 வரை
சுபநேரம் : 11.06 – 12.36 வரை
இராகுகாலம் : 3.36 – 5.06 வரை

# 7 மாத குழந்தையை கொன்று தானும் தூக்கிட்டுத் தற்கொலை செய்த தாய்!



திம்புள்ள,ஜன.28

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவின் கொட்டகலை றொசிட்டா பகுதியில் தாய் ஒருவர் தனது 7 மாத ஆண் குழந்தையை கழுத்து நெரித்து கொலை செய்ததோடு, அவரும் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கே.நித்தியகல்யாணி (வயது 26) என்பவரும் அவரது 7 மாத ஆண் குழந்தையான சி.சந்தீப் அஷ்விந்தன் என்ற குழந்தையுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் நள்ளிரவு உறவினர்களுடன் வீட்டில் இருந்ததுடன் நேற்று காலை வீட்டுக்கு வெளியில் கொய்யாமரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் தாயின் சடலத்தையும், குழந்தையின் சடலத்தையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக குறித்த பெண் தனது குழந்தையின் கழுத்தை நெரித்து கொலை செய்ததோடு, பெண்ணும் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். எவ்வாறாயினும் இந்தப் பெண்ணும், குழந்தையும் தற்கொலை செய்து கொண்டார்களா? அல்லது வேறெவரும் அவர்களை கொலை செய்தார்களா என்பது சந்தேகத்துக்குரியது என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

அட்டன் நீதிவான் முன்னிலையில் மரண விசாரணைகள் மேற்கொண்ட பின் பிரேத பரிசோதனைக்காக சடலங்கள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இந்த சம்பவம் குறித்து திம்புள்ள பத்தனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஏ)

# தேசிய போதை ஒழிப்பு வாரத்தின் இறுதி விழிப்புணர்வு கருத்தமர்வு



மன்னார்,ஜன.28

தேசிய ரீதியில் ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்ட போதை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு போதைப் பொருள் தடுப்பில் ஊடகவியலாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் தொடர்பாடல்களுடன் மாணவர்களுக்கு தெளிவூட்டும் வகையில் மன்னார் மாவட்டத்தில் பல பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வு கருத்தமர்வு மற்றும் விசேட கலந்துரையாடல் நிகழ்வுகள் கடந்த ஒரு வாரமாக நடைபெற்றன.

இறுதிநாள் கடந்த வெள்ளிக்கிழமை (25.01.2019) மன். நறுவலிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் பெரியமடு மகா வித்தியாலயத்தில் ஊடகவியலாளர்கள், மன்னார் பொது அமைப்புக்களின் அதிகாரிகளால் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

குறித்த கருத்தமர்வில் பாடசாலை ரீதியில் மாணவர்கள் எவ்வாறு போதைப் பொருட்கள் பாவனையில் இருந்து தங்களை பாதுகாத்து கொள்ள முடியும் என்பது தொடர்பாகவும் போதைப் பொருள் பாவனை தொடர்பான குற்றச் செயல் ஒன்றினால் பாதிக்கப்படும்போது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகவும் விளக்கி கூறப்பட்டன.

அத்துடன் மாணவர்களுடைய கருத்துக்களும் உள்வாங்கப்பட்டு ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

தொடர்சியாக போதைப் பொருள் ஒழிப்பு வாரத்தில் நடைமுறை செயற்பாடுகள் மற்றும் விழிப்புணர்வு பேரணிகள், பொலிஸ் உள்ளூர் அரசியல் வாதிகள் ஆகியோரை நேரடியாக அழைத்து மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது (ஏ,112)

# பொலன்னறுவை மாநகர முதல்வர் மட்டு. மாநகர சபைக்கு விஜயம்

மட்டக்களப்பு,ஜன.28

பொலன்னறுவை மாநகர முதல்வர் மட்டக்களப்பு மாநரக சபைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றினை கடந்த வெள்ளிக்கிழமை மேற்கொண்டார்.

பொலன்னறுவை உள்ளூராட்சி சபையானது பிரதேச சபையாக இருந்து ஜனாதிபதியினால் மாநகர சபையாக தரமுயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து அம் மாநரக சபையின் முதலாவது மாநரக முதல்வராக தெரிவு செய்யப்பட்ட சானக ரணசிங்க மட்டக்களப்பு மாநகர சபைக்கு தனது உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டார்.

இவரை மாநகர பிரதி முதல்வர் மற்றும் ஆணையாளர் உள்ளிட்ட குழுவினர் வரவேற்றனர்.



மட்டக்களப்பு மாநரக சபையின் சிறப்பான செயற்பாடுகள் தொடர்பாக பாராட்டியதோடு, புதிதாக பயணத்தை ஆரம்பித்துள்ள தமது மாநரக சபையையும் மட்டக்களப்பு மாநரக சபையின் நிர்வாகக் கட்டமைப்புகளையும் நல்ல பல திட்டங்களையும் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது மாநரக பிரதி முதல்வர் க.சத்தியசீலன், மாநகரசபை உறுப்பினரும், வேலைகள் குழுவின் தலைவருமான த.இராஜேந்திரம் உட்பட மாநகர ஆணையாளர், பிரதி ஆணையாளர், பொறியியலாளர், கணக்காளர் ஆகியோரும் அவருடன் கலந்துரையாடலை நடத்தினர். (ஏ)

# காத்தான்குடி தளவைத்தியசாலை ஆண்கள் விடுதி திறந்து வைப்பு



காத்தான்குடி,ஜன.28

காத்தான்குடி தளவைத்தியசாலையில் அமைக்கப்பட்ட ஆண்கள் சிகிச்சை விடுதி கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி ஹிஸ்புல்லாஹ்வினால் திறந்து வைக்கப்பட்டது

மட்டக்களப்பு காத்தான்குடி தளவைத்தியசாலையில் அவசியத் தேவையாக காணப்பட்ட ஆண்கள் சிகிச்சை விடுதி பாத்திமா பௌண்டேசனின் அனுசரணையில் அமைக்கப்பட்டு நோயாளிகளின் பயன்பாட்டுக்காக திறந்து வைக்கப்பட்டது.

காத்தான்குடி தள வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் எம்.எஸ்.எம்.ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாக பங்கேற்று இவ் வைத்தியப்பிரிவினை திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் பாத்திமா பௌண்டேசனின் பணிப்பாளர் சஹாப்தீன் இக்ராம் சமூக செயற்பாட்டாளர் பிரோஸ் நவாஸ் ,வைத்திய அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கிழக்கு மாகாண ஆளுநருக்கு காத்தான்குடி தளவைத்தியசாலையினால் அவரின் சேவைகளைப்பாராட்டி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ)

# பழமரக்கன்றுகள் விநியோகம்



பதுளை,ஜன.28

பழ உற்பத்தியை அதிகரிக்கும் முகமாக பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு மாமரக்கன்றுகள் விநியோகிக்கும் நிகழ்வு பதுளை பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சின் மாவட்ட ஒருங்கிணைப்பு காரியாலய வளாகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வுக்கு அதிதியாக பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சரும் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஸ் கலந்து கொண்டு பழமரக்கன்றுகளை வழங்கினார். (ஏ)

# பாவனையற்ற வீட்டில் கள்ளச்சாராயம் வடிப்பு

பொலிஸாரால் மூவர் கைது

முல்லைத்தீவு,ஜன.28

முல்லைத்தீவு சுதந்திரபுரம் கொலணி பகுதியில் பாவனையற்ற வீடு ஒன்றில் கள்ளச்சாராயம் வடிப்பதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது

இதற்கமைய நேற்றுமுன்தினம்புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ஏ.சந்திரபால தலைமையிலான குழுவினர் குறித்த பகுதிக்கு சென்று சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர். இதன்போது கசிப்பு காய்ச்சும் நடவடிக்கையில் ஈடுபட்ட மூவரை கைசெய்ததுடன் அவர்களிடம் இருந்த கசிப்பு காய்ச்சுவதற்காக பயப்படுத்தப்பட்ட பொருள்கள் உள்ளிட்ட 05 பரல் கோடா, 20 லீற்றர் கசிப்பு என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

சுதந்திரபுரம் கொலனி பகுதியில் மக்களின் பாவனையற்ற வீடுகளை பயன்படுத்தி சட்டவிரோத செயல்கள் அதிகரித்து வருகின்றனர் என மக்கள் குற்றம் தெவிக்கின்றனர்.

இந்நிலையிலேயே இவ்வாறான பாவனையற்ற வீட்டை பயன்படுத்தி சட்டவிரோத கசிப்பு காய்ச்சும் நடவடிக்கையில் ஈடுபட்ட மூவரையும் கைதுசெய்து சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தியுள்ளதாக புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர். (ஏ)



# மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அடிக்கல்லை நட்டார் பிரதமர் மோடி

மதுரை,ஜன.28

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கு பிரதமர் மோடி நேற்று அடிக்கல் நட்டார். மதுரை, தஞ்சாவூர், திரு நெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரிகளில் சூப்பர் ஸ்பெஷலிட்டி மருத்துவமனை உள்ளிட்ட பல்வேறு திட்டங்களையும் அவர் தொடங்கி வைத்தார்.

மதுரை திருப்பரங்குன்றத்தை அடுத்த தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க மத்திய அரசு அண்மையில் அனுமதி அளித்தது. ரூ.1,264 கோடியில் அமையும் எய்ம்ஸ் மருத்துவமனையில் 750 படுக்கை வசதி, 100 எம்.பி.பி.எஸ். கல்வி இடங்கள் உட்பட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன.

ஆளுநர் பன்வாரிலால் புரோகித், முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, துணை முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், தமிழக அமைச்சர்கள், பாஜக நிர்வாகிகள் பிரதமர் மோடியை வரவேற்றனர்.



பின்னர் எய்ம்ஸ் மருத்துவமனை அடிக்கல் நடும் விழா தொடங்கியது. விழாவில் ஆளுநர் பன்வாரிலால் புரோகித், முதல்வர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், மத்திய அமைச்சர்கள் நட்டா, பியூஸ்கோயல், பொன்ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற துணை சபாநாயகர் தம்பிதுரை, தமிழக அமைச்சர்கள் விஜயபாஸ்கர், ஆர்.பி.உதயகுமார், செல்லூர் ராஜு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## வைகோ மீது செருப்பு வீச்சு



மதுரை,ஜன.28

பிரதமர் மோடியின் தமிழக வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கறுப்புக்கொடி காட்டிய மதிமுக பொதுச்செயலாளர் வைகோ மீது பாஜக மகளிர் அணியை சேர்ந்த சிலர் செருப்புகளை வீசினர்

மதுரை பாண்டி பஜார் அருகில் மோடிக்கு எதிராக கறுப்பு கொடி காட்ட மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தயாராக தனது தொண்டர்களுடன் நின்றிருந்தார்.

அப்போது அந்த வழியாக பேருந்தில் அடிக்கல் நடும் விழாவுக்கு சென்ற பாஜக மகளிர் அணியினர் வைகோ மீது சரமாரியாக பத்துக்கு மேற்பட்ட செருப்பை வீசினர். இதனால் ஆத்திரம் அடைந்த மதிமுகவினர் அந்த பேருந்தின் மீது செருப்புகளை வீச அந்த இடமே ரணகளமானது

இந்த நிலையில் பிரதமருக்கு கறுப்புக் கொடி காட்டியதாக வைகோ மற்றும் மே 17 இயக்கத்தின் திருமுருகன் காந்தி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

## தென்னாபிரிக்க ஜனாதிபதியுடன் ராகுல், மன்மோகன்சிங் பேச்சு



புதுடில்லி:,ஜன.28

குடியரசு தினவிழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க வந்த தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ராமபோசாவை முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் சந்தித்தனர்.

இந்த சந்திப்பின்போது இருதரப்பு உறவுகள் குறித்து ஆலோசித்தனர். அப்போது, ஜனாதிபதி சிரில் ராமபோசா ராகுல் காந்தியை தென்னாபிரிக்காவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். இந்த சந்திப்பின்போது மூத்த தலைவர் ஆனந்த் சர்மாவும் உடனிருந்தார்.

## 11 எம்.எல்.ஏக்கள் வழக்குத் தீர்ப்புடன் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் – ஸ்டாலின்

சென்னை,ஜன.28

11 எம்.எல்.ஏ.க்கள் வழக்கில் தீர்ப்பு வந்ததும் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்படும் என்று திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடாளுமன்ற தேர்தலோடு தமிழக சட்டசபைக்கும் பொதுத் தேர்தல் வந்துவிடும் என தெரிகிறது. காரணம் இன்று தமிழகத்தில் ஒரு சிறுபான்மை ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஆட்சியை மத்தியில் உள்ள பா.ஜனதா ஆட்சி முட்டுக்கொடுத்து காப்பாற்றிக் கொண்டிருக்கிறது.

2017 ஆம் ஆண்டு எடப்பாடி பழனிச்சாமி ஆட்சிக்கு எதிராக சட்டசபையில் ஓ.பன்னீர்செல்வம் உள்பட 11 எம்.எல். ஏ.க்கள் வாக்களித்தது தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கிறது. இதில் 11 எம்.எல்.ஏ.க்களின் பதவி செல்லுமா? செல்லாதா? என்பதில் பெப்ரவரி முதல் வாரத்தில் தீர்ப்பு வர உள்ளது. அப்போது



நிச்சயமாக தமிழ்நாட்டில் எடப்பாடி பழனிச்சாமி ஆட்சி இருக்காது.

இதை சொன்னால் நான் கனவு காண்பதாக எடப்பாடி பழனிச்சாமி கூறுகிறார். நான் கனவு காண வில்லை. நினைவாக நடக்கப்போகிறது.

உங்கள் ஆட்சியை கவிழ்க்க நாங்கள் கனவா காண வேண்டும்? கனவெல்லாம் காண வேண்டிய அவசியமே கிடையாது. நினைவாகத்தான் நடக்கப் போகின்றது என்றார்.

## 'திரும்பிப் போ மோடி' என்பது ஒட்டுமொத்த இந்தியாவின் குரல்

### சொல்கிறார் திருநாவுக்கரசர்

சென்னை,ஜன.28

திரும்பிப்போ மோடி என்பது ஒட்டு மொத்த இந்தியாவின் குரல் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர் கூறியுள்ளார்.

பிரதமர் மோடி நேற்று மதுரை வந்தார். அவருடைய வருகைக்கு எதிராக தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் பல்வேறு அமைப்புகளும் "கோ பேக் மோடி" என்று சமூக வலைத் தளங்களில் பதிவிட்டன.

இதுபற்றி தமிழக காங்கிரஸ் தலைவர் திருநாவுக்கரசர் கூறியவை வருமாறு:

திரும்பிப்போ மோடி என்பது தமிழகத்தின் குரல் மட்டுமல்ல. ஒட்டுமொத்த இந்தியாவின் குரல். எதுவுமே செய்யாத மோடி பதவியை விட்டுப் போகவேண்டும் என்று மக்கள் நினைக்கிறார்கள். அதன் வெளிப்பாடுதான் இந்த பதிவுகள்.

தமிழகத்தில் புயல் பாதித்த நேரத்திலும் சரி, தூத்துக்குடிச் சம்பவத்திலும் சரி ஓர் ஆறுதல் வார்த்தை கூட சொல்



லாதவர், தமிழகத்தை திரும்பி பார்க்காதவர். எனவே திரும்பிப்போ என்று சொல்லாமல் என்ன செய்வார்கள்.

வருகிற நாடாளுமன்ற தேர்தலிலும் அவருக்கு இதே நிலைதான் ஏற்படும். வாக்கு கேட்டு வராதீர்கள். நாங்கள் வாக்களிக்கமாட்டோம் என்றுதான் சொல்வார்கள் – என்றார். (ஏ)

## கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையான மக்களுக்கு மதுரை எய்ம்ஸில் சிகிச்சை

மதுரை,ஜன.28

கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை உள்ள மக்களுக்கு மதுரை எய்ம்ஸ் ஆஸ்பத்திரியில் தரமான சிகிச்சை வழங்கப்படும் என பிரதமர் மோடி கூறினார்.

மேலும் மோடி பேசுகையில்–

இங்கு தொடங்கப்பட்டுள்ள எய்ம்ஸ் மருத்துவமனை நாட்டின் சிறந்த மருத்துவனையாக திகழும். கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை உள்ள மக்களுக்கு சிறந்த சிகிச்சை கிடைக்கும். மேலும் குஜராத், கவுகாத்தி ஆகிய இடங்களிலும் எய்ம்ஸ் ஆஸ்பத்திரி பணிகள் நடைபெற்று வருகின்றன.

மதுரையில் ரூ. ஆயிரத்து 264 கோடியில் எய்ம்ஸ் ஆஸ்பத்திரி அமைகிறது. நாட்டு மக்களுக்கு சுகாதார வசதிகள் அமைப்பதில் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

நாட்டின் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் நவீன மயமாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடிமகனுக்கும் ரூ. 5 லட்சம் வரை மருத்துவ காப்பீடு வசதி செய்யப்பட்டுள்ளது.

உலகத்திலேயே இதுதான் சிறந்த காப்பீட்டு திட்டமாகும். இந்த திட்டத்தின் மூலம் 1 கோடியே 67 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் ரூ. 200 கோடி மதிப்



பிரதமர் மோடி உறுதியளிப்பு

பீட்டில் 89 ஆயிரம் பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். 2025 என்ற தொலை நோக்கு திட்டத்தை மத்திய அரசு சிறப்பாக செயலாற்றி வருகிறது.

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார். (ஏ)

# பிலிப்பைன்ஸ் தேவாலயத்தில் குண்டுகள் வெடிப்பு



## 21 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

மணிலா,ஜன.28

தெற்கு பிலிப்பைன்ஸ் ஜோலோ தீவில் கத்தோலிக்க தேவாலயத்தை குறிவைத்து நடத்தப்பட்ட குண்டு வெடிப்பில் 21 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தெற்கு பிலிப்பைன்ஸில் உள்ள தீவு ஜோலோ. இங்குள்ள ரோமன் கத்தோலிக் தேவாலயத்துக்கு அருகில் பயங்கர சத்தத்துடன் நேற்று குண்டு வெடித்தது. சிறிது நேரம் கழித்து அரசுப் படைகள் தங்கியிருந்த முகாம் அருகில் மற்றொரு குண்டு வெடித்தது. இதில் அரசுப் படைகள் மற்றும் பொதுமக்கள் என 21 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

காயமடைந்த 48 பேர் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். "குண்டு வெடிப்பு நடைபெற்ற இடத்தில் பாதுகாப்பை அதிகரிக்கவும் பொதுமக்கள் கூடும் இடம், வழிபாட்டுத் தலங்களில் உச்சக்கட்ட பாதுகாப்பு வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்" என்று பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்த தாக்குதலுக்கு எந்தவொரு அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. (ஏ)

உடலில் இருந்து வீசியது துர்நாற்றம்

# விமானத்தினுள் இருந்து இறக்கப்பட்ட யூத தம்பதி

நியுயோர்க்,ஜன.28

உடலில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக சக பயணிகளும், ஊழியர்களும் புகார் தெரிவித்ததால் யூத தம்பதி விமானத்தில் இருந்து இறக்கி விடப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.




அமெரிக்காவில் மிச்சிகனில் உள்ள சவுத் பீல்ட் பகுதியைச் சேர்ந்தவர் யோச்சி அட்லர் (37). இவரது மனைவி ஜென்னி (31). யூத தம்பதியரான இவர்கள் விடுமுறையை கழிக்க மியாமிக்கு தமது 19 மாத பெண் குழந்தையுடன் வந்திருந்தனர். அங்கிருந்து கடந்த 23ம் திகதி அமெரிக்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் டெட்ராய்ட் நகருக்கு புறப்பட்டனர். விமானத்தில் ஏறி இவர்கள் அமர்ந்து இருந்தனர். சிறிது நேரத்தில் அவர்கள் 3 பேரும் கட்டாயப்படுத்தி விமானத்தில் இருந்து வெளியேற்றப் பட்டனர்.

அட்லரின் உடலில் இருந்து துர்நாற்றம் வீசுவதாக சக பயணிகளும், ஊழியர்களும் புகார் தெரிவித்த தாகவும் அதனால் அவர்கள் இறக்கி விடப்பட்டதாகவும் விமான நிர்வாகம் கூறியது. ஆனால் இன விரோதம் காரணமாக தாங்கள் கீழே இறக்கி விடப்பட்டதாக அட்லர் தெரிவித்தார்.

# பிஜி தீவில் நிலநடுக்கம்

பிஜி,ஜன.28

தெற்கு பசிபிக் கடலில் அமைந்துள்ள பிஜி தீவு அருகே நேற்றுக் காலை கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டு உள்ளது. இது ரிச்டரில் 6.2 ஆக பதிவாகியுள்ளது.

இந்நிலநடுக்கத்தினை தொடர்ந்து மற்றொரு சிறிய அளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டது. இது 5.2 ஆக பதிவானது.



இந்த இரு நிலநடுக்கங்களும் தீவுக்கு தெற்கே பிஜி மற்றும் டோங்காஆகிய பகுதிகளுக்கு இடையே ஏற்பட்டு உள்ளன. இது 500 கிலோமீற்றர் ஆழத்தில் மையம் கொண்டுள்ளது.

ஆனால் இந்நிலநடுக்கத்தினால் சுனாமி எச்சரிக்கை எதனையும் பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் வெளியிடவில்லை. இதனால் ஏற்பட்ட பொருள் சேதங்கள் பற்றிய விவரங்கள் எதுவும் வெளியாகவில்லை.

# அமெரிக்க அரசுத்துறை முடக்கம் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது

வொஷிங்டன், ஜன.28

அமெரிக்காவில் 35 நாட்கள் நீடித்த அரசு துறைகள் முடக்கம், தற்காலிகமாக முடிவுக்கு வந்தது.

அண்டை நாடான மெக்சிக்கோ வழியாக அமெரிக்காவினுள் நுழைபவர்களை தடுக்கும் விதத்தில் எல்லையில் தடுப்புச்சுவர் கட்ட மெக்சிக்கோ பணம் தர மறுத்து விட்ட நிலையில், உள்நாட்டு நிதி 5.7 பில்லியன் டொலர் (சுமார் ரூ.40 ஆயிரத்து 540 கோடி) வழங்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்றத்தை ஜனாதிபதி டிரம்ப் வலியுறுத்தி வருகிறார்.

ஆனால் ஜனநாயக கட்சி, டிரம்பின் இந்த திட்டத்துக்கு முட்டுக்கட்டை போட்டு வருகிறது. மக்களின் வரிப்பணத்தை, தடுப்புச்சுவர் கட்ட வழங்க முடியாது என்று அந்தக் கட்சி கூறுகிறது.

இதன்காரணமாக செலவின பிரேரணையை நாடாளுமன்ற பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றிய டிரம்ப் அரசால், செனட் சபையில் நிறைவேற்ற முடியவில்லை. இதன் காரணமாக வெளியுறவு, உள்நாட்டு பாதுகாப்பு, போக்குவரத்து, விவசாயம், நீதித்துறை உள்ளிட்ட 9 துறைகளுக்கு நிதி ஒதுக்கீடு இல்லாததால், அவை கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் முடங்கின.



இந்த நிலையில் 35 நாட்களாக நீடித்து வந்த அரசு துறைகள் முடக்கத்தில் நேற்று முன்தினம் திடீர் திருப்பம் ஏற்பட்டது. இந்த முடக்கத்தை தற்காலிகமாக முடிவுக்கு கொண்டு வர ஏதுவாக ஒரு ஒப்பந்தத்துக்கு டிரம்ப் உடன்பட்டார்.

இதன்படி அரசுத்துறைகள் 21 நாட்கள் செயல்படுவதற்கு ஏற்ற வகையில் (அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை) தற்காலிக செலவின பிரேரணை, நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்டது. அந்த பிரேரணைக்கு டிரம்ப் உடனடியாக ஒப்புதல் வழங்கினார்.

இதையொட்டி அவர் டுவிட்டரில் வெளியிட்ட பதிவில், இந்த முடிவு, எந்த விதத்திலும் சலுகை இல்லை. அரசுத்துறைகள் முடக்கத்தால் மிகவும் பாதிப்புக்குள்ளான லட்சக்கணக்கான மக்களின் நலன்களை கருத்தில் கொண்டு எடுக்கப்பட்ட முடிவு இது. எல்லைச்சுவர் விவகாரத்தில் மக்கள் எனது வார்த்தைகளுக்கு செவிகொடுப்பார்கள் என கருதுகிறேன். இதில் 21 நாட்களில் ஒப்பந்தம் ஏற்படாவிட்டால், மீண்டும் அரசுத்துறைகள் முடங்கும் என கூறி உள்ளார். (ஏ)

# அமெரிக்காவில் இளைஞன் வெறியாட்டம்

## பெற்றோர்,காதலி உட்பட ஐவர் சுட்டுக்கொலை

ஹூஸ்டன்,ஜன.28

அமெரிக்காவின் தென்கிழக்கு மாநிலம் லூசியானாவில் பெற்றோர், காதலி உள்பட 5 பேரை சுட்டுக் கொன்று தப்பிய இளைஞரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

அமெரிக்காவின் தென்கிழக்கு மாநிலமான லூசியானாவின் கொன்சாலெஸ் நகரில் வசித்து வந்தவர்கள் எலிசபெத் தேரியட் மற்றும் கெய்த் தேரியட். 51 வயது நிறைந்த இந்த தம்பதியின் மகன் டகோட்டா தேரியட் (வயது 21).

டகோட்டா தனது பெற்றோரை துப்பாக்கியால் சுட்டுள்ளான். இதில் அவர்கள் படுகாயமடைந்து உள்ளனர். இந்த தகவல் அறிந்து வந்த பொலிஸார் அவர்களை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர். அவர்களை சுட்டது டகோட்டா என பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்தது.

இந்நிலையில், டகோட்டாவின் பெற்றோர் உயிரிழந்து விட்டனர். இதேபோன்று அருகே உள்ள மற்றொரு பகுதியில் துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்தனர். அவர்கள் பில்லி எர்னெஸ்ட் (வயது 43), டேனர் எர்னெஸ்ட் (வயது 17) மற்றும் சம்மர் எர்னெஸ்ட் (வயது 20) எனத் தெரியவந்துள்ளது. இவர்களில் ஒருவர் டகோட்டாவின் காதலி எனக் கூறப்பட்டது.

இந்த கொலைகளை செய்து விட்டு டகோட்டா தப்பிச் சென்று உள்ளான் என கூறப்படுகிறது. தொடர்ந்து பொலிஸார் டகோட்டாவை தேடிவருகின்றனர்.

# பிரேசிலில் நாட்டில் உடைந்தது அணை; 9 பேர் பலி; 300 பேர் மாயம்

பிரேசிலியா, ஜன.28

பிரேசில் நாட்டில் ஒரு அணை உடைந்தது. இதில் 9 பேர் பலியாகினர். 300 பேர் மாயம் ஆகினர்.

பிரேசில் நாட்டில் மினாஸ் கெராயிஸ் மாகாணத்தில், புருமாதின்ஹோ நகருக்கு அருகே வாலே என்ற நிறுவ னத்துக்கு சொந்தமான இரும்புத்தாது சுரங்கம் செயல்பட்டு வருகிறது.

இந்தச் சுரங்கத்தில் கடந்த வெள்ளிக்கிழமை உள்ளூர் நேரப்படி மதியம் சுமார் ஒரு மணிக்கு இரும்புத்தாது வெட்டி எடுக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்தனர். இதேபோன்று சுரங்க தொழிலாளர்களுக்காக பிரத்யேகமாக செயல்பட்டு வந்த உணவு விடுதியில் ஏராளமான தொழிலாளர்கள் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த சுரங்கத்தின் அருகே இருந்த அணை திடீரென உடைந்தது. அதில் இருந்து சேறு, ஊருக்குள் புகுந்தது.

அணை சேற்றில் வாலே இரும்பு சுரங்கத்தில் இரும்புதாது வெட்டியெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள், உணவு விடுதியில் சாப்பிட்டுக்கொண்டிருந்த தொழிலாளர்கள் மற்றும் பொதுமக்கள் என பல தரப்பினரும் சிக்கிக்கொண்டனர்.

ஏறத்தாழ 300 பேரை காணவில்லை என முதல் கட்ட தகவல்கள் கூறின. அணை உடைந்த தற்கான காரணம் உடனடியாக தெரிய வரவில்லை. (ஏ)



# வினைத்திறனுள்ள பாடசாலை முறைமை

'ஒரு பாடசாலை திறக்கப்படும் போது ஆயிரம் சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன' என்பார்கள். பாடசாலை என்பது ஒழுக்கத்தையும் அறிவையும் வளர்க்கும் உன்னதமான செழுங்கலை நிலையமாகும்.

'முறைமை" என்பதனை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்தலாம்.

'யாதேனுமொரு பொதுநோக்கத்தை அடைவதற்கென இடைத்தொடர்புகளைக் கொண்டகூறுகளின் தொகுப்பே முறைமை எனப்படும்;."

பாடசாலை யானது விழுமிய அறிவுள்ள மாணவர்களை உருவாக்கும் பொதுநோக்கத்திற்காக அதிபர், ஆசிரியர், பெற்றோர், பழைய மாணவர்கள்,கல்வித் திணைக்களம் என்பவற்றோடு இடையறா இடைத் தொடர்புகளை ஏற்படுத்தி தொழிற்பட்டு கொண்டிருக்கிறது. ஆகவே பாடசாலை யும் ஒருவகையில் முறைமை ஆகும்.

முறைமையின் கூறுகளாக –

* உள்ளீடு
* முறைவழியாக்கம்
* வெளியீடு என்பன காணப்படுகின்றன.

INPUT → PROCESSING → OUTPUT

பிள்ளைகள் என்னும் உள்ளீட்டினைப் பெற்று. ஆசிரியர்கள் மற்றும் ஏனைய வளங்களின் இடைவினை கொண்ட நடவடிக்கைகள் காரணமாக பிள்ளைகள் கற்றல் செயல் முறையினல் ஈடுபட்டு (முறைவழியாக்கம்) நாட்டுக்குத் தேவையான நற்பிரசைகளை பெறல் எனும் வெளியீட்டினைப் பெறுதலே பாடசாலை முறைமையாகும்.

பாடசாலையில் மாணவர்கள் தலைமைத்துவப் பண்புகளை வளர்ப்பதற்கான சந்தர்ப்பங்களாக

* காலைப்பிரார்த்தனை இதர செயற்பாடுகள்
* மாணவர்களுக்கான மன்ற செயற்பாடுகள்
* பாடசாலை, கோட்ட, வலய, மாகாண, தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள்
* பாடசாலை சிரமதானங்கள், மாணவர் வகுப்புத்தலைவர், மாணவத் தலைவர் பாடசாலை கழக செயற்பாடுகள், பாடசாலை நிகழ்ச்சிகள் (சமய நிகழ்வுகள்)

சாரணர் பயிற்சி முகாம்
முதலுதவி பிரிவு
கண்காட்சிகள்
மாணவர் சுற்றுலா
மாணவர் நாடாளுமன்றம்;
என்பன அமைகின்றன.

மேலும் உட்படுத்தல் கல்வி விழுமியக்கல்வி;, பரிகாரக்கற்பித்தல், விசேட தேவையுள்ளோருக்கான கல்வி என்பன போதிக்கப்படுகின்றன. தியானம், யோகப்பயிற்சி, உடற்பயிற்சி என்பவற்றின் மூலம் மாணவர்கள் உளவளத்தை மேம்படுத்த வழிவகை கிடைக்கின்றது.

அதிபரின் நல்லாளுகையுள்ள முகாமைத்துவத்தின் கீழ் அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களின் வழிகாட்டல்களை செவ்வனே பின்பற்றி தமது அயராத முயற்சியினாலும் (' முயற்சி திருவினையாக்கும்") ஊக்கத்தினாலும் நாட்டுக்கு தேவையான நட்பிரசைகளாக மாணவர்கள் உருவாக வேண்டும். பாடசாலையின் முறைமையின் வினைத்திறனை இச்செயற்பாடுகள் மேம்படுத்தும்.

**தர்மலிங்கம் நவரூபன்**
ஆசிரியர்,
யா/செங்குந்த இந்துக்கல்லூரி.

# கல்வியும் சமுதாயமும்

கல்வி என்பது பிழைப்புக்கு வருவாய் தேடும்' ஒரு வழிமுறை அல்லது செல்வம் ஈட்டும் ஒரு சாதனம் மட்டும் அன்று அது மெய்யை தேடுவதற்கும் அறநெறியைப் பயில்வதற்கும் மனித ஆன்மாக்கு பயிற்சி அளிக்கும் ஒரு நெறி முறை' என்ற வாக்கியத்திற்கு இணங்க இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டானது பல்வேறு தகவல் தொடர்பாடல்களின் வளர்ச்சியினால் பிரகாசித்து கொண்டு இருக்கிறது.அத்துடன் பல்வேறுபட்ட துறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. உதாரணமாக மருத்துவத்துறை ,சுகாதாரத் துறை, கல்வித்துறை, போக்குவரத்துத் துறை, விவசாயத்துறை என்பன ஆகும். இவற்றில் கல்வித்துறையில் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளன. ஒவ்வொரு நொடியும் இவ்வுலகில் ஏதோ ஒரு மாற்றமானது இடம் பெற்றுக் கொண்டு இருக்கின்றது.

ஆரம்பகாலத்தில் எமது முன்னோர்களின் கல்வி வளர்ச்சியினைப் பார்த்தால் தமது அன்றாட நடைமுறைகளில் அவர்கள் பின்பற்றும் பழக்க வழக்கங்கள் சம்பிரதாயங்கள் பண்பாடுகளுமே அவர்கள் கல்வியாக அமைந்து இருந்தது. 'எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான்' என்ற வாக்கானது எமது முன்னோர்களுடைய கல்வி நடவடிக்கைகளை பறைசாற்றி நிக்கின்றன. அவர்களுக்கு இடையில் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கும் அவர்களுடைய மகிழ்ச்சியான துன்பமான செய்திகளை தெரிவிக்க பறையடித்தும் உயரமான இடத்தில் தீ மூட்டியம் புறாக்களை விடுவித்தும் அவர்களுடைய வளர்ச்சிக்கான ஆரம்பகட்ட படிமுறையாக இருந்தது. இவ்வாறான பாமர மக்கள் உடைய செய்தி பரிமாற்றங்கள் மேன்மேலும் மெருகூட்டப்பட்டு கல்வி என்ற மூன்றெழுத்திற்கு அடித்தளம் இடப்பட்டு இருந்தது என்பதில் இதில் இருந்து தெளிவாகின்றது.

கல்வியினை எம்மால் மட்டுமே முழுமையை அடைந்து விட முடியாது. இதற்கு குரு என்ற ஒருவர் அவசியமாகும். இதனடிப்படையில் தான் குருகுலக்கல்வி முறை வளர்ச்சி அடைந்து இருந்தது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நல்ல ஒழுக்கத்துடனும் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குபவர்களாக இருப்பதற்கும் தமது முற்கால முடிவுகளை மிகச்சரியானதாக தீர்மானித்து கொள்ள அவ்வூரிலே அனைத்து கலைகளிலும் புலமை பெற்று குருவிடம் சீராக அனுப்புகிறார்கள். அவ்சீர்களை குருவின் பாதுகாப்பிலேயே குருவின் ஆச்சிரமத்திலேயே தங்கி இருந்து தமது கல்வி நடவடிக்கைகளை பின்பற்று கிறார்கள்.

அக்காலகட்டத்தில் எழுத்து மூலமான கல்விவளர்ச்சி அடைந்து இருக்கவில்லை. வாய்மொழி மூலமாகவே கல்வி நடவடிக்கைகள் போதிக்கப்படுகின்றன. அவை இதிகாசங்களாகவோ குருமுறைகளாகவோ வாழ்க்கை முறைகளாகவோ இறைவன் புகழ் பாடுவதாகவோ அமையப் பெற்றிருக்கும். குருவிடமிருந்து கல்வி மட்டுமல்லாது நல்லொழுக்கத்திலும் சிறந்தவனாக வரவேண்டும் என்பதற்காக அங்கு குருவுக்கு பணிவிடை செய்யக் கூடிய வாறும் சீடர்கள் இருப்பார்கள் இதனைப் பள்ளிக்கல்வி நடவடிக்கைகள் என்று அழைக்கப்படக்கூடியதாய் உள்ளது.

நாகரிகம் வரத்தொடங்கிய பின்னர் இவ்வாறாக குருகுலக்கல்வி முறை அல்லாமலே போய்விட்டது என்று கூறலாம். வாய்மொழி மூலம் இருந்த கல்வி முறையானது இன்று 'வாய்மொழி' என்னும் இருளை அகற்றும் தீபமாய் எழுத்தறிவு தீபமாக ஏற்றப்பட்டு சிறதுஎன்றுகூறலாம். இன்று பாடசாலை ஒன்று உருவாக்கப்பட்டு அங்கு மாணவர்கள் படிப்பதற்கு மட்டுமல்லாது நல்ல பழக்கவழக்கங்களையும் திறமைகளையும் வளர்த்துக் கொள்வதற்காக செல்கின்றார்கள். இவ்வாறு கனவுகளை இலட்சியங்களாக்கி அதனை நிறைவேற்ற ஓர் இடம் அவசியம் அது தான் பாடசாலையாகும். இன்று நவீன தொழில்நுட்பங்களுடன் நிறைந்ததாக பாடசாலைகள் மாற்றப்படுகின்றன. இதனால் தான் தேடல் அறிவினை பூர்த்தியாக்கிக் கொள்ள மாணவர்கள் இதனைப் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது. அதிபர் ஆசிரியரின் உதவியினை நாடுவதுடன் பாடசாலை நூலகத்தினையும் பயன்படுத்திக் கொள்ள கூடியதாக உள்ளது. கல்விநடவடிக்கைகளை மாணவர்கள் நிறைவேற்ற பல்வேறு வசதிவாய்ப்புக்கள் பாடசாலைகளால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. கற்றல் என்பது வாழ்க்கை நீடித்த செயற்பாடாகும். இது தொடர்ச்சியான மீளமைப்புச் செய்தலையும் அனுபவங்களைப் புதுப்பித்தலையும் உள்ளடக்கின்றது. கற்றல் என்பது விதிமுறையாகவும் விதிமுறை இல்லாமலும் நாடெங்கும் எல்லா இடங்களிலும் எல்லா மக்களாலும் எல்லாக் காலங்களிலும் வயது வேறுபாடின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்ற ஒரு செயன் முறை ஆகும்.

' மன்னனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு, கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு, இளமையில் கல்வி சிலையில் எழுத்து, என்று கூறுவார்கள். எமது சிறுபராயத்தில் இருந்தே கல்வியினை கற்க வேய்டும். அவ்வாறே கற்றால்தான் நாம் எமது எண்ணங்களையும் முடிவுகளையும் ஒழுங்காகவும் திடமாகவும் நிறைவேற்றிக் கொள்ளலாம். இன்றைய காலகட்டத்தில் எவ்வளவு தான் படித்தாலும் பண்பு இல்லாவிடில் சமூதாத்தில் மதிக்கப்படமாட்டான்.

'வற்றாத கடல்தனில்
ஆழமதைக் கண்டாலும்
வளமான கல்வியதன்
கரைகாணல் முடியாதே
எத்துறை தன்னிலும்
நாம்பட்டங்கள் வென்றாலும்
எல்லாக் கல்வியும் நாம்
பெற்றவராய் முடியாதே'

எவ்வளவு கல்வியினை கற்று இருந்தாலும் கல்வியென்பது கடல் போன்றது அதிலே நாம் கற்றது கரையாகும். ஆழமாக எவராலும் கல்வியினை கற்றுவிடமுடியாது. இதற்கிடையில் கல்வியில் நாம் உயர்ந்து விட்டோம் என்று மற்றவரை இகழ்வதும் உறவினர்களையோ அயலவர்களையோ மதிக்காமல் செல்வதும் ஒரு கல்விகற்றவனுக்கு சிறப்பன்று. கல்வி கற்றவனிடத்தில் முதல் அடக்கம் முக்கியம் அத்துடன் பொறுமை முக்கியம் இரண்டும் இல்லாதவன் படித்தவனாகக் கொள்ளப்படமாட்டான் இன்றைய சமூதாயத்தில் இவ்வாறு தான் நடைபெறுகின்றது. இவ்வாறு இருப்பது இறுதியில் ஏதோ ஒரு நிலையில் அவர்களை வாழ்த்துவதற்காக மட்டுமே இருக்கும். அவர்களின் பிரகாசம் மொழுகுதிரி போல ஒவ்வொன்றாக உருகி பின்பு மெழுகு மிஞ்சுவது போல அவர்களுக்கும் ஒன்றும் மிஞ்சாது. இன்று கல்வியினை விலைக்க வாங்கும் அளவிற்கு கூட எமது வாழ்க்கை அமைந்து விட்டது. 'செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்விச் செல்வம்'

ஆகவேசமுதாயத்தில்நாம் இளமையாக இருக்கம் போதே கல்வியினை கற்று சமுதாயத்தில் பேரும் புகழும் உள்ளபிரஜையாக உருவாகவேண்டும்.

**சிவராசா சசிதரன்**
ஆசிரியர்
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.

# மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் ஜனநாயக விரோதச் செயற்பாட்டில் அரசு

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.28

மாகாணசபை தேர்தலை உரிய காலத்தில் நடத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் ஜனநாயகத்துக்கு விரோதமான செயற்பாட்டில் தற்போதைய அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது என கபே அமைப்பின் பதில் நிறைவேற்றுப்பணிப்பாளர் மனாஸ் மக்கின் நேற்று(ஞாயிற்றுக்கிழமை) தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து கூறுகையில் –

நாடாளுமன்றத்தில் ஜனநாயகத்தை நிலைபெற செய்வதற்காக கடந்த ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் இரவு பகல் பாராமல் பாடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், இதுவரைக்கும் மக்கள் பிரதிநிதிகளை மாகாண சபைகளில் அமர்த்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாமல் இருக்கின்றனர்.

இலங்கையில் காணப்படுகின்ற 9 மாகாண சபைகளில் 6 மாகாண சபைகளின் கால எல்லை முடிவடைந்துள்ளது. ஏனைய 3 மாகாண சபைகளின் காலங்களும் எதிர்வரும் ஏப்ரல் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் நிறைவுபெறும்.

அந்தவகையில் வடக்கு, கிழக்கு, மத்திய, வடமேற்கு, வட மத்திய, சப்ரகமுவ ஆகிய ஆறு மாகாண சபைகளின் காலங்கள் தற்போது நிறைவடைந்துள்ளன.அதேபோன்று மேல் மாகாணம், தென் மாகாணம், மற்றும் ஊவா மாகாணங்களின் கால எல்லையும் எதிர் வரும் மாதங்களில் நிறைவடையவுள்ளன.

இந்நிலையில் மாகாணசபை தேர்தலை நடத்துவது தொடர்பில் இறுதி தீர்மானத்தை எடுக்கக்கூடிய ஒரே இடம் நாடாளுமன்றமாகும்.

எனவே மீள் எல்லை நிர்ணயம், புதிய தேர்தல் முறை தொழிநுட்பம் ஆகியவற்றில் சிக்கல் காணப்படுவதாக கூறி தேர்தல் நடத்துவதனை காலம் தாழ்த்தாமல் பழைய தேர்தல் முறையில் தேர்தலை நடத்துவதற்கு நாடாளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.




## பளையில் ஜனவரியில் காணி விடுப்பு

# மீள்குடியேற்ற பதிவு மேற்கொள்ள பிரதேச செயலாளர் அறிவுறுத்து

பளை,ஜன.28

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் ஹலோ ரஸ்ட் நிறுவனத்தினால் 225.31 ஏக்கர் நிலப்பரப்பில் கண்ணி வெடிகள் அகற்றப்பட்டு தற்போது பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டு வருவதனால் அவ் விடயங்களின் காணிகளை கையளிக்கும் நிகழ்வு ஜன வரி மாதத்தின் இறுதியில் நடைபெறவுள்ளதாகப் பிரதேச செயலாளர் ப.ஜெயராணி அறிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

வேம்பொடுகேணியில் ஏ– 9 வீதியிலிருந்து தெற்கு நோக்கி ஏற்கனவே விடுவிக்கப்பட்ட 200 மீற்றர் பகுதியை அடுத்துள்ள மேலும் 300 மீற்றர் வரையான பகுதி விடுவிக்கப்படவுள்ளது.

முகமாலையில் ஏ– 9 வீதிக்குச் சமனான வடக்கு நோக்கி ஏற்கனவே விடுவிக்கப்பட்ட 200 மீற்றர் (அம்பளாவளை கிராமம்) ஒருபகுதி விடுவிக்கப்படவுள்ளது.

இத்தாவிலில் இத்தாவில் சந்தியிலிருந்து முருகையன் கோவிலுக்குச் செல்லும் வீதிக்கு மேற்கு பக்கமாக ஏற்கனவே விடுவிக்கப்பட்ட ஏ– 9 வீதியிலிருந்து 200 மீற்றர் பகுதியைத் தொடர்ந்து மேலும் உயர் மின்வலு வலையமைப்பு வரையான 887 மீற்றர் விடுவிக்கப்படவுள்ளது.

எனவே மேற்கூறப்பட்ட இடங்களுக்குரியவர்கள் மீள் குடியேற்ற செயற்பாடுகளை இலகுபடுத்தும் பொருட்டு மீள் குடியேற்றம் தொடர்பான பதிவுகளை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் மேற்கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார்.

(எ)

# காட்டு யானையின் தாக்குதலால் அச்சத்தில் தாந்தாமலை மக்கள்

மட்டக்களப்பு,ஜன.28

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாந்தாமலை பகுதியில் யானையின் தாக்குதல்களினால் வீடுகள் சேதமடைந்துள்ளன.



மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புற பகுதிகளில் ஒன்றாக கருதப்படும் தாந்தாமலை பகுதியில்உள்ளமக்கள்தொடர்ச்சியாக யானையின் தாக்குதலுக்குள்ளாகி வருகிறார்கள் என கவலை வெளியிட்டுள்ளனர்.

இப்பகுதியில்கச்சான், சோளம், நெற்செய்கையில் ஈடுபடும் மக்களே அதிகளவான நிலையில் உள்ளனர்.

இந்நிலையில் யானையின் தாக்குதல்கள் காரணமாக உடைமைகளை மட்டுமன்றி உயிர்களையும் இழக்கும் நிலை யேற்பட் டுள்ளதாகவும் பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே இது தொடர்பில் அதிகாரிகள்,அரசியல்வாதிகள் தமக்குரிய பாதுகாபபை உறுதிப்படுத்துமாறு அம் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(எ)

# நாட்டில் யாழ். மாவட்டத்திலேயே அதிகளவு டெங்கு நோயாளர்கள்

கொழும்பு,ஜன.28

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் யாழ். மாவட்டத்திலேயே அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர், விசேட வைத்தியநிபுணர் பிரஷீலா சமரவீர குறிப்பிட்டுள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்

நாளாந்தம் 500 முதல் 600 டெங்கு நோயாளர்கள் பதிவ கின்றனர். வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 3,743 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் அதிகளவானோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் வட மாகாணத்தில் நிலவிய சீரற்ற வானிலையைத் தொடர்ந்தே, டெங்கு காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மின்கட்டணம் உயர்த்தப்படாது

கொழும்பு,ஜன.28

மின் கட்டணம் உயர்த்தப்படமாட்டாது என மின்வலு, எரிசக்தி, வர்த்தக அபிவிருத்தி அமைச்சர் ரவி கருணாநாயக்க உறுதி வழங்கியுள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடக்கும் கண்காட்சியொன்றைப் பார்வையிட்ட பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவசரமாக மின்சாரத்தைக் கொள்வனவு செய்யும் நிலை ஏற்படாத வகையில் மின்உற்பத்தியையும், சேமிப்பையும் சீராக முன்னெடுத்துச் செல்லும் திட்டங்களை முன்னெடுப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.




# மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன



தெல்லிப்பழை,ஜன.28

தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட இருபது மீனவக் குடும்பங்களுக்கு கடந்த வாரம் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன எனப் பிரதேச செயலாளர் சி.சிவசிறி தெரிவித்தார்.

இந்த உபகரணங்கள் யு.என்.டி.பியின் அனுசரணையுடன் வழங்கப்பட்டன.

3 இலட்சத்து 5 ஆயிரம் ரூபா பெறுமதியான படகுகளும் ஒரு இலட்சத்து 95 ஆயிரம் ரூபாய் பெறுமதியான படகுகளுக்கான இயந்திரங்களும் வழங்கப்பட்டன என அவர் குறிப்பிட்டார்.



# மேற்கிந்தியத் தீவுகளிடம் வாங்கி கட்டிய இங்கிலாந்து

பிரிட்ஜ்டவுன்,ஜன.28

பிரிட்ஜ்டவுனில் நடைபெற்ற மேற்கிந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்டில் இங்கிலாந்து 381 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது.

மேற்கிந்தியா - இங்கிலாந்து இடையிலான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிட்ஜ்டவுனில் நடைபெற்றுது. நாணயச்சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்த மேற்கிந்தியா முதல் இன்னிங்சில் 289 ஓட்டங்கள் சேர்த்து அனைத்து விக்கெட்டையும் இழந்தது. பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து 77 ஓட்டங்களில் சுருண்டது.

212 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2 ஆவது இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்திய அணி ஜேசன் ஹோல்டர் (202), டவ்ரிச் (116) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 6 விக்கெட் இழப்புக்கு 415 ஓட்டங்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இரு இன்னிங்சிலும் சேர்த்து மேற்கிந்திய அணி 627 ஓட்டங்கள் முன்னிலை பெற்றதால் இங்கிலாந்துக்கு 628 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயித்தது.

628 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்குடன் இங்கிலாந்து 2 ஆவது இனிங்சில் துடுப்பாட்டம் செய்தது. 3 ஆவது நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து விக்கெட் இழப்பின்றி 56 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ரோரி பேர்ன்ஸ் 39 , ஜென்னிங்ஸ் 11 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

நேற்று முன்தினம் 4 ஆவது நாள் ஆட்டம் தொடங்கியது. ஜென்னிங்ஸ் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தாலும், பேர்ன்ஸ் சிறப்பாக விளையாடி 84 ஓட்டங்கள் சேர்த்தார். அதன்பின் மேற்கிந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளரான ரோஸ்டர் சேஸ் பந்து வீச்சில் இங்கிலாந்து விக்கெட்டுக்கள் மளமள வென சரிந்தன.

சேஸ் 8 விக்கெட்டுக்கள் வீழ்த்த இங்கிலாந்து 2 ஆவது இன்னிங்சில் 246ஓட்டங்களில் அனைத்து விக்கெட்டையும் இழந்தது.

இதனால் இங்கிலாந்து 381 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வியடைந்தது. இரட்டை சதம் அடித்த ஜேசன் ஹோல்டர் ஆட்ட நாயகன் விருது பெற்றார். இரு அணிகளுக்கிடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டி நோர்த் சவுண்டில் வருகிற 31 ஆம் திகதி தொடங்குகிறது.




காத்மண்டு,ஜன.28

சச்சின் டெண்டுல்கரின் சர்வதேச சாதனையை நேபாள நாட்டின் இளம் கிரிக்கெட் வீரர் ரோஹித் பாவ்டெல் முறியடித்து உள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்திற்கு எதிரான 2வது ஒரு நாள் போட்டியில் 145 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நேபாள அணி வெற்றி பெற்றது. இந்த போட்டியில் நேபாள நாட்டை சேர்ந்த 16 வருடம் 146 நாட்கள் வயது கொண்ட இளம் கிரிக்கெட் வீரரான ரோஹித் பாவ்டெல் 58 பந்துகளில் 55 ஓட்டங்கள் எடுத்து உள்ளார்.

இதனால் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் மிக குறைந்த வயதில் அரை சதம் அடித்து சாதனை புரிந்த பெருமையை இவர் பெற்றுள்ளார்.

இதற்கு முன், சச்சின் டெண்டுல்கர் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டி ஒன்றில் அரை சதம் (59 ஓட்டங்கள்) கடந்தபொழுது அவரது வயது 16 வருடம் 213 நாட்கள் ஆகும். இதனால் நேபாள கிரிக்கெட் அணியின் வருங்கால நட்சத்திர வீரராக பாவ்டெல் உருவெடுத்துள்ளார்.

## ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ்



# கிண்ணம் வென்றார் ஓசாகா

மெல்போர்ன்,ஜன.28

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் கிவிடோவாவை வீழ்த்தி ஜப்பானின் ஒசாகா பட்டம் வென்றார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் திருவிழா மெல்போர்ன் நகரில் நடந்து வருகிறது.

இதில் நேற்றுமுன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் செக் குடியரசு நாட்டை சேர்ந்த பெட்ரா கிவிடோவாவை ஜப்பான் நாட்டை சேர்ந்த நவோமி ஒசாகாவை எதிர்கொண்டார்.

ஆட்டம் தொடங்கியதும் இருவரும் பொறுப்பாக ஆடினர். முதல் செட்டை கைப்பற்ற இருவரும் கடுமையாக போராடினர். இறுதியில், முதல் செட்டை 7-6 (2) என்ற கணக்கில் தன்வசப்படுத்தினார் ஒசாகா.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, 2வது செட்டை கிவிடோவா 5-7 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

வெற்றியை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டை ஒசாகா 6-4 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தினார். ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் பட்டம் வென்ற முதல் ஜப்பானிய வீராங்கனை என்ற பெருமையும் பெற்றார். இந்த போட்டி சுமார் 2 மணி நேரம் 27 நிமிடங்கள் நீடித்தது.




சிட்னி,ஜன.28

தொடைத்தசை உபாதையினால் இலங்கை அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளரான லஹிரு குமார, ஆஸ்திரேலிய அணியுடனான டெஸ்ட் தொடரின் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இருந்து விலகியுள்ளார்.

ஆஸ்திரேலிய அணியுடனான முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தில் உபாதைக்கு ஆளாகிய லஹிரு குமார போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டத்தின் மூன்றாம் இடைவெளியில் பந்துவீச மைதானத்துக்கு வரவில்லை.

லஹிரு குமாரவினை பரிசோதனை செய்த போது அவரது தொடைத்தசையில் கிழிவு ஒன்று இருப்பது கண்டறியப்பட்டிருக்கின்றது.

அதேவேளை, லஹிரு குமார தவிர இலங்கை அணியின் மற்றுமொரு வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான துஷ்மந்த சமீரவும் உபாதை ஒன்றினால் பாதிக்கப்பட்டிருப்பதனால் அவரும் ஆஸ்திரேலிய அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவதில் சந்தேகம் நிலவுகின்றது.

# வியாபாரத்துறையில் ஈடுபடவுள்ள உலகின் மின்னல் வேக மனிதர்

ஜமைக்கா,ஜன.28

ஜமைக்காவின் உசேன் போல்ட், தனது விளையாட்டுத்துறை வாழ்க்கைக்கு விடைகொடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

32 வயதான போல்ட், மெய்வல்லுனர் அரங்கில் 100 மீற்றர், 200 மீற்றர், 4யீ100 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டிகளில் ஒலிம்பிக் மற்றும் உலக சம்பியனாக முத்திரை பதித்தவர். இவர் சர்வதேச மெய்வல்லுநர் அரங்கில் இருந்து 2017ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற பிறகு கால்பந்து விளையாட்டில் தீவிர கவனம் செலுத்தியிருந்தார்.

இந்த நிலையில், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சென்ட்ரல் கோஸ்ட் மெரைனர்ஸ் கழக அணிக்காக ஏ டிவின் லீக் போட்டிகளில் விளையாட அவர் கடந்த வருடம் ஒப்பந்தம் செய்யப்பட்டு, சுமார் 2 மாதங்கள் பயிற்சிகளிலும் ஈடுபட்டு ஓரிரண்டு போட்டிகளிலும் விளையாடினார். அவர், உரிய அனுசரணையாளர்கள் கிடைக்காத காரணத்தால் கடந்த நவம்பர் மாதம் அந்த கழகத்திலிருந்து விலகிச் சென்றார்.



இந்நிலையில், கால்பந்தாட்ட வீரராகுவதற்கு தான் கண்ட கனவை தற்போது மூ’டை கட்டி விட்டு வியாபாரத் துறையில் கவனம் செலுத்தவுள்ளதாக போல்ட் தெரிவித்துள்ளார்.

## ரணில் போன்று

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

'எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இருந்து பறிக்கப்பட்டு அரசின் ஓர் அங்கமான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைக்கப்பட்டமை அநீதியான செயற்பாடு. எதிர்க்கட்சித்தலைவர் பதவியில் இருப்பதற்கு மகிந்த தகுதியற்றவர். இந்த விடயத்தில் சபாநாயகர் தவறிழைத்துள்ளார்' என்று நாடாளுமன்றத்தில் கடந்த வெள்ளி அறிக்கையொன்றைச்சமர்ப்பித்து உரையாற்றிய கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் குற்றம் சாட்டியிருந்தார்.

சம்பந்தனின் உரை தொடர்பிலேயே மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எதிர்க்கட்சித் தலைவர் பதவியை நான் கேட்டு வாங்கவில்லை. சம்பந்தன் போன்று பதவி ஆசை எனக்கில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பரிந்துரையின் பிரகாரம் நாடாளுமன்றத்தின் சம்பிரதாயங்களுக்கு அமைய எதிர்க்கட்சித் தலைவர் பதவியைச் சபாநாயகர் எனக்கு வழங்கினார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தலைவரான மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகவும், அமைச்சரவையின்தலைவராகவும் இருக்கின்றபோதிலும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஏனைய உறுப்பினர்கள் எதிர்க்கட்சி வரிசையில்தான் அமர்ந்திருக்கின்றார்கள்.

கடந்த வருடம் இறுதியில் கூட்டு அரசிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு விலகிவிட்டது. நாடாளுமன்ற விதிமுறைகளுக்கு அமைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புதற்போது பிரதான எதிர்க்கட்சியாகும். இதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

முன்னாள் ஜனாதிபதிகளான டி.பி.விஜேதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க ஆகியோரின் ஆட்சிக் காலங்களிலும் ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்துள்ளனர்என்றுசம்பந்தனின் உரைக்கு சபாநாயகர் நல்ல விளக்கம் கொடுத்துள்ளார்–என்றார். (ஐ)

## உபரயில் நிலையம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் இருந்து நேற்றுக் காலை புறப்பட்ட உத்தர தேவி ரயிலில் வருகை தந்த அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, அறிவியல்நகர் உபரயில் நிலையத்தை நேற்று நண்பகல் திறந்து வைத்தார்.

ரயிலில் வருகை தந்திருந்த அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவை வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் இந்தியத் துணைத் தூதுவர் ஆகியோர் வரவேற்றனர்.

தொடர்ந்து தேசியக் கொடி ஏற்றி வைக்கப்பட்டதுடன், அமைச்சர் அர்ஜுன ரணதுங்க நினைவுக் கல்லைத் திறந்து வைத்தார். தொடர்ந்து கட்டடத்தைத் திறந்து வைத்த அமைச்சர்பயணச்சீட்டையும்வழங்கினார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன், யாழ். இந்தியத் துணைத் தூதுவர், கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ–07)

## முன்னாள்தளபதிகளுக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளை இல்லாமல் ஒழிப்பதற்கு, ஆற்றிய பங்களிப்புக்காக இவர்களை பீல்ட் மார்லாகப் பதவி உயர்த்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டமிட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

படைத்துறைப் பதவிகளில் மிக உயரியதாக மதிக்கப்படும் பீல்ட் மார்ல் பதவியை வழங்கும் அதிகாரத்தை முப்படைகளினதும் தளபதியான ஜனாதிபதி கொண்டிருக்கிறார்.

ஏற்கனவே, அவர் இறுதிப் போருக்குத் தலைமை தாங்கிய முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு பீல்ட் மார்ஷல் பதவியை வழங்கியிருந்தார்.

பாதுகாப்புச் செயலராக இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, இந்த உயர் பதவியை ஏற்க மறுத்திருந்தார்.

இலங்கையில் பீல்ட் மார்ஷல் பதவியை வகிக்கும் ஒரே தளபதி பொன்சேகா என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பான வழக்கில் முன்னாள் கடற்படைத்தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொடவும், விசாரணைகளை எதிர்கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரிக்கப்படமுடியாத

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி – அறிவியல் நகரில் புதிதாக அமைக்கப்பட்ட உபரயில் நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

பிளவுபடாததும், பிரிக்க முடியாததுமான நாட்டில் அனைத்து உரிமைகளையும் சுதந்திரங்களையும் அனுபவிக்கும் நிலைக்கு தமிழர்கள் வரவேண்டும். அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்பதுடன், இது தொடர்பான கோரிக்கைகளை நாம் உரிய தரப்பினரிடம் முன்வைத்திருக்கின்றோம்.

யுத்தம் நிறைவடைந்து பத்தாண்டுகளைக் கடந்து செல்லும் நாம் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த ரயில் சேவையை வடக்கையும் தெற்கையும் இணைக்கும் உறவுப் பாலமாகவே நாம் பார்க்கின்றோம்.

இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்களின் மூலம் எமது வேற்றுமைகளைக் களைந்து செயற்படுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமையும். எனவே ஆளுநர் என்ற ரீதியில் நான் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இந்தியத் துணைத் தூதுவர் ஆகியோருக்கும் நன்றி செலுத்துகின்றேன்.

எதிர்காலத்தில் இவ்வாறான பல அபிவிருத்தித் திட்டங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு நானும் எமது மக்களும் தயாராகவே இருக்கின்றோம்– என்றார். (ஐ)

## 'உத்தரதேவி' ரயில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் சேவையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இந்தியத் தூதுவர் தரண்ஜித் சிங் சந்து ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்துள்ளனர்.

724 பயணிகள் ஒரே தடவையில் பயணிக்கும் வசதி கொண்ட இந்தத் ரயிலில் முதலாம் வகுப்புப் பெட்டியும் இரண்டாம் வகுப்புப் பெட்டியும் குளிரூட்டப்பட்டவை.

இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட இந்த ரயில் வடக்கு, தெற்கு நல்லிணக்கத்தைக் குறிக்கும் வகையில் சேவையில் ஈடுபடுகின்றது என போக்குவரத்து அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த ரயிலின் நேற்றைய முதலாவது சேவையில் யாழ்ப்பாணம் மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப் பைகள், அப்பியாசப் புத்தகங்கள் உள்ளிட்ட பாடசாலை உபகரணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சு தெரிவித்தது.

கொழும்பிலிருந்து நேற்றுக் காலையில் தனது பயணத்தை ஆரம்பித்த உத்தரதேவி பிற்பகல் 2.40 மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.

இந்தப் பயணத்தில் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க , அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர், ரயில்நிலைய அதிகாரிகள் எனப் பலரும் பயணம் மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை, தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, யாழ்.மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் ஆகியோர் யாழ்.பிரதான ரயில் நிலையத்தில் வைத்து அவர்களை வரவேற்றனர்.

இதன்போது தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ஐ–07)

## புதிய அரசமைப்பால்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உலக இலங்கை அமைப்பின்தலைவர் சுனில் சந்திரகுமார உள்ளிட்ட தரப்பினர், கர்தினால் மல்கம் ரஞ்சித் சந்தித்தபோது அவர்இதனைக்குறிப்பிட்டுள்ளார் நக் கொழும்பு ஊடக மொன்று செய்தி வெளியிட்டுள் ளது.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டுக்கு இந்த மாதிரியான ஓர் புதிய அரசமைப்பு அவசியமில்லை. இந்த மாதிரியான அரசமைப்பினால் நாட்டின் நல்லிணக்கமும் சகவாழ்வும் பாதிக்கப்படும்.

இந்த புதிய அரசமைப்பை வேறு மாகாணங்கள். ஒரு மாகாணம் மட்டும் கோருவதற்காக அவசர அவசரமாக ஏன் அரசியல்அமைப்பைக்கொண்டு வர வேண்டும்–என்றார். (ஐ)

## மகேந்திரனை நாடு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அந்நாட்டுப் பிரதமருடன் நடத்திய சந்திப்பிலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன்மத்தியவங்கிபிணைமுறி மோசடி தொடர்பான ஆவணத்தையும் சிங்கப்பூர் பிரதமரிடம் ஜனாதிபதி கையளித்துள்ளார் எனவும் அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக முன்னாள் மத்தியவங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் பிரதான நபரென ஜனாதிபதி ஆணைக்குழு நடத்திய விசாரணையில் கண்டறிந்துள்ளது. அவர் தற்போது சிங்கப்பூரில் வாழ்ந்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## கே.கே.எஸ்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் மூலம், இறக்குமதி, ஏற்றுமதித் துறைக்கு உதவியாக இருப்பதுடன், நாட்டின் பொருளாதாரத்திலும் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும். அத்துடன், பிரதேசத்தின் உட்கட்டமைப்பு வசதிகளும், பெருமளவு நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகளும்கிடைக்கும் என்று அமைச்சர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்தின் கீழ், சரக்குக் கப்பல்கள்வரக்கூடிய வகையில், துறைமுகப் பகுதி 9 மீற்றர் வரை ஆழமாக்கப்படவுள்ளது. தற்போதுள்ள அலைதாங்கி முற்றிலுமாகமாற்றியமைக்கப்படவுள்ளது.

தற்போதுள்ளஒருஇறங்குதுறை முழுமையாகபுனரமைக்கப்படும், அத்துடன் மேலும் ஒரு புதிய இறங்குதுறையும் அமைக்கப்படவுள்ளது.

காங்கேசன்துறை துறைமுக சுற்றுப்புறத்தில் 15 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில், திட்டத்தின் ஆரம்பக் கட்ட வேலைகளைத் துறைமுகஅதிகாரசபைஏற்கனவே ஆரம்பித்துள்ளது.அடுத்தகட்டமாக 50 ஏக்கர் பரப்பளவுக்கு இந்தத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

திட்டத்தின் ஆரம்பத்திட்டமிடல் செயல்முறைகளுக்கான ஆலோசகர்களை நியமிக்கும் நடவடிக்கைகளை துறைமுக அதிகாரசபை ஆரம்பித்துள்ளது.

ஆலோசகர்களின் மதிப்பீடுகளைத்தொடர்ந்துவெளிப்படையான முறையில் கட்டுமானம் செய்பவர் தெரிவு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

2020ஆம் ஆண்டு இறுதிக்குள் இந்த திட்டம் முழுமையாக நிறைவடையும் என்று அமைச்சர் சாகல ரத்நாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (ஐ)

## கேப்பாபிலவு முகாம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த கேப்பாபிலவு மக்கள், நேற்று முன் தினம் முதல் படைமுகாம் வாயிலில் முற்றுகைப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

எனினும் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்குப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களை படைமுகாம் வாயிலிலிருந்து 75மீற்றர்தொலைவில்சென்று போராட்டம் நடத்துமாறும், அந்தப் பகுதியில் போக்குவரத்துக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு செயற்படுமாறும் முல்லைத்தீவு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.

அதன்படி படைமுகாம் வாயிலிலிருந்து 75 மீற்றர் தொலைவில் சென்று போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த முற்றுகைப் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. இராணுவ முகாமுக்கு முன்பாக, பெண்களும் குழந்தைகளும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தப் போராட்டத்தில் தென்னிலங்கையைச் சேர்ந்த பொதுமக்களும், அருட் சகோதரிகளும் பொது அமைப்புக்களும் கலந்துகொண்டனர்.

கேப்பாபிலவில் உள்ள தங்களது காணிகளை விடுவித்துத்தருமாறு வலியுறுத்தி கடந்த 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், கேப்பாபிலவுப் பிரதேசத்தில் வசித்த 84 குடும்பங்களினால் தொடர்ச்சியாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு, ஒரு மாதகால அவகாசம் வழங்குமாறு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினால்வாக்குறுதிவழங்கப்பட்டது.

எனினும், வழங்கப்பட்ட வாக்குறுதிக்கான கால அவகாசம் நிறைவடைந்துள்ளதையடுத்து, படைமுகாம் வாயிலில் மக்கள் தமது போராட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளனர். (ஐ)

## விகாரையும், புத்தர்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் கேப்பாபுலவு மக்களை சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதேவேளை, கேப்பாபுலவு மக்களின் காணி விடுவிப்பு தொடர்பாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று முன் தினம் ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அந்த மக்களின் காணிகளை விடுவிப்பதாக ஜனாதிபதி அளித்துள்ள வாக்குறுதி மீறப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய சிவசக்தி ஆனந்தன், இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதிக்குத் தெரிவித்து கேப்பாபுலவு மக்களின் காணிகளை விடுவிக்க ஏற்பாடு செய்யுமாறு வலியுறுத்தினார்.

இந்தக் கோரிக்கைக்குப் பதிலுரைத்த ஆளுநர், ஜனாதிபதி தற்சமயம் வெளிநாடு சென்றுள்ளார். அவர் நாடு திரும்பியவுடன் காணி விடுவிப்பு தொடர்பாக அவருடன் பேசிச் சாதகமான ஒரு பதிலை தருவதாகத் தெரிவித்துள்ளார். (ஐ)

## தமிழர்தலைமைகளுக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாம் ஆட்சிக்கு வந்தவுடன் தமிழர்களுக்கு எம் மீதான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஒருமித்தநாட்டுக்குள்அனைவரும் ஐக்கியமாக வாழ முடியும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. யுத்தத்தை வெற்றி கொண்ட தலைவர்களினால் மக்களை ஒன்றிணைக்க முடியாது போனபோதும் நாம் மக்களை ஒன்றிணைத்துள்ளோம்.

நாம் ஆட்சிக்கு வந்த பின்னரே மஹிந்த ராஜபக்ஷவுக்கு சர்வதேச சமூகத்திடம் இருந்து வந்த அழுத்தங்களை இல்லாது செய்தோம். எமது தலையீட்டால் தான் சர்வதேச அழுத்தங்களை நீக்கி நாட்டைக் கட்டியெழுப்பும் சூழலை உருவாக்கிக் கொண்டோம். இராணுவத்தை தண்டிக்கும் சர்வதேச நோக்கத்தை இல்லாது செய்தோம். – என்றார். (ஐ)

## ஜனாதிபதி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின்தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனதான். எனவே மைத்திரியை எதிர்ப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு எவ்வித அடிப்படை உரிமையும் இல்லை.–என்றார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# வடக்கில் அதிகரித்த போதைப் பாவனை கட்டுப்படுத்தக்கோரி யாழில் போராட்டம்



வடக்கில் அதிகரித்துள்ள போதைப் பொருள் பாவனை, மற்றும் வன் முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்த வலியுறுத்தி கவனவீர்ப்புப்போராட்டமொன்றுநேற்றைய தினம் யாழில் முன்னெடுக்கப்பட்டது .

ஜனநாயகத்துக்கான இளைஞர் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பிரதானபேருந்துதரிப்பிடத்துக்குமுன்னால் நேற்று இடம்பெற்றது.

போதைப் பொருளை ஒழிக்க வேண்டுமென வலியுறுத்தி ஜனநாயகத்துக்கான இளைஞர் அமைப்பானது முன்னெடுத்த இப் போராட்டத் தில் மேலும் பல இளைஞர்களும் இணைந்து இப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

போதைப் பொருளைக் கட்டுப்படுத்து, சிறுவர் பெண்கள் துஷ்பிரயோகத்தை கட்டுப்படுத்த வேண்டும், தோட்டத் தொழிலாளர்களது சம்பளத்தை 1000 ரூபாவாக உயர்த்த வேண்டும்போன்றகோஷங்களை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் எழுப்பியிருந்தனர்.

மேலும் இளைஞர்களது வேலை வாய்ப்புக்களை உறுதிப்படுத்த வேண்டும், இதற்கு அரசியல் தலைமைகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் இக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

## நாடாளுமன்றத்துக்குள் எப்படி வந்தது மிளகாய்பொடி?

நாடாளுமன்றத்திற்குள் அண்மையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது எப்படி மிளகாய் பொடி கொண்டு வரப்பட்டது என்பது தொடர்பில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இரண்டு உறுப்பினர்கள் தங்கள் பாதணிக்குள் மறைத்து வைத்து மிளகாய் பொடியைக் கொண்டு வந்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

நாடாளுமன்றத்துக்குள் உறுப்பினர் மிளகாய் பொடி கொண்டு வந்தமை, நாற்கா லியில் தாக்குதல் மேற் கொண்டமை, சபாநாயகர் உரையாற்றும் மைக்ரோ போனை உடைத்தமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையில் இந்த விடயம் உறுதியாகியுள்ளது. உறுப்பினர்கள் இருவர் தங்கள் பாதணியி னுள் மறைத்து நாடாளுமன்றத்துக்கு மிளகாய்ப் பொடி கொண்டு வரப்பட்டுள்ளதாக உறுதியாகியுள்ளது.

# மரண அறிவித்தல்



## திரு. பரமு மார்க்கண்டு

காரைநகர் களபூமி பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும், இல 83/9, கஞ்சி ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கோண்ட திரு பரமு மார்க்கண்டு அவர்கள் சனிக்கிழமை (26.01.2019) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு – பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற (வையாபுரி) முருகேசு – பொன்னம்மா அவர்களின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான துரைராசா, பாக்கியம், கனகரட்ணம், விஜயரட்ணம், சரஸ்வதி, இலட்சுமிப்பிள்ளை, பூபாலசிங்கம் மற்றும் அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், மங்கையர்க்கரசி, ஸ்ரீநாதன், மகேஸ்வரி,தனலட்சுமி, சரஸ்வதி, ஸ்ரீதரன், விஜயகலா ஆகியோரின் அன்புத் தந்தையும், தில்லைநாதன், காலஞ்சென்ற கங்காதேவி, கௌரிதேவி, கிருபானந்தம், யோகநாதன், காலஞ்சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சுதன் ஷர்மினா, நிவாசினி, பவதாரணி, பிரணவன், பவித்திரா, திவ்வியா, சிவகஜன் ஆகியோரின் அன்புப் பேரனும், சேஷ்திரனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28.01.2019) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு அன்னாரின் இலத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் யாழ்ப்பாணம் கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு காலை 9 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொலைபேசி
021 222 1983

தகவல்:
குடும்பத்தினர்

# கணித மலை சாய்ந்தது



எமது கணித ஆசான்

திரு.ஏ.எஸ் அகஸ்ரின்
அவர்களுக்கு

எமது விழி நீர் அஞ்சலிகள்

யாழ். புனித பத்திரியார் கல்வி
1992 உ.த.பிரிவு மாணவர்கள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.